# தமிழ் நாடு

திங்களிதழ்

இதழ் - 18 | தமிழ்நாட்டு மக்களின் உரிமைக் குரல் | நன்கொடை உரு.10


## சனநாயக முகமூடி அணிந்து கொண்டு அணிதிரள்கிறது பாசிச பாஜகவின் முன்னணி..

# பார்ப்பனிய ஒட்டுண்ணிகளாய்.. எட்டப்பன் வழியில் எடப்பாடிகள், இராமதாசுகள், வாசன்கள், இரங்கசாமிகள், ஜான்பாண்டியன்கள், பச்சமுத்துகள், கிருஷ்ணசாமிகள், ஏ சி சண்முகங்கள் - என ஆரியப் பார்ப்பனிய அடிமைகள் குப்புற வீழ்ந்துக்கிடக்கின்றனர்..

### அரசியலமைப்பை, சனநாயகத்தை, மதச்சார்பின்மையைக் காப்பாற்றுவதற்காக 26 கட்சிகள் இணைந்து 'இண்டியா' -எனப் பாசிசத்தை வீழ்த்தப் போவதாக எதிர் நிற்கின்றன..

## மொழித் தேசங்கள் எனும் மாநில உரிமை முழக்கங்களை ஓங்கி முழங்காமல் பாசிச பார்ப்பனியம் வீழ்ந்து விடாது..

இந்தியப் பார்ப்பனிய அதிகார வெறியை நேரடியாக, வெளிப்படையாக எதிர்த்துக் களமாடவும், மாநிலங்களின் முற்றதிகாரங்களை மீட்டெடுக்கவும், இந்திய அரசு என்பது அதிகாரமற்ற ஒன்றியம் என்கிற அளவில் மட்டுமே இருக்க வேண்டும்..

ஆளுநர் அமைப்பை ஒழிப்பது..

சுங்கச்சாவடி எனும் வழிப்பறிகளை நிறுத்துவது..

ஜி. எஸ். டி. - வரிப் பிடுங்கல்களைத் தடுப்பது..

நீட் - உள்ளிட்ட பாசிசத் தேர்வு முறைகளையே இல்லாதொழிப்பது..

பல்கலைக்கழக மானியக் குழு என்கிற வாலாட்டங்களை நறுக்கி முழு அதிகாரங்களையும் மாநில அரசுகளே வைத்திருப்பது..

கல்வித்துறை அதிகாரங்கள் மாநிலங்களுக்கு மட்டுமே என வரையறுப்பது..

- இப்படியான எண்ணற்ற அனைத்து அதிகாரங்களையும் அந்தந்த மாநிலங்களே பெற்றிருக்கிற வகையில் அரசியல் அதிகார மாற்றங்கள் செய்தால்தான் பார்ப்பனியத்தை, பாசிச பாஜக-வை வீழ்த்த முடியும்..

அப்படியான நோக்கங்களையும் அமைத்துக் கொள்ளவில்லையானால் ஆரியப் பார்ப்பனியம் 'இண்டியா'வுக்குள்ளேயே ஆர். எஸ். எஸ். வழி ஊடுருவவும்.. கூட்டணி உறவுகளை அறுத்துக் கூறுபிரிக்கவுமே செய்யும்..

அன்றைக்கு இந்திரா காந்தியின் பாசிசப் போக்கை எதிர்த்த ஜனதா-வை பாரதிய ஜனதாவாக மாற்றியது, பார்ப்பனிய பாசிசத்தை எதிர்த்த வி. பி. சிங்-கை வீழ்த்தியது என்ற படிப்பினைகள் மட்டுமல்ல.., சேர, சோழ, பாண்டியர் கால அரசர்களிடையே முரண்களையும் மோதல்களையும், அழிவுகளையும் தமிழ்கூர் நல்லுலகத்தைச் சிதைத்த படிப்பினைகளையும் ஆழ்ந்து உணர வேண்டும்..

இன்றைக்கு, பாஜக வை எதிர்க்கிற பல கட்சிகள் பார்ப்பனிய எதிர்ப்புக் கொள்கை கொண்டிருக்கவில்லை.. பலர் அந்த எதிர்ப்பின் முதன்மையை உணரவில்லை.. பலர் வல்லரசிய கார்ப்பரேட் முதலாளியத்தை எதிர்க்கும் கொள்கையோ திறனோ கொண்டிருக்கவில்லை. இத்தகைய மெலிவைப் பயன்படுத்தியே பாஜக வளர்க்கப்படுகிறது.. தன்னை எதிர்ப்பவர்களின் மெலிவுகளைச் சரிகட்டியோ, கண்டித்தோ, மிரட்டியோ, அதிகார வெறியால் அடக்கியோதான் பாஜக வலுப்பெற்று வருகிறதேயல்லாமல் .. அதற்கொன்றும் மக்கள் செல்வாக்கு இல்லை.. நாட்டில் உள்ள அரம்பர்களையெல்லாம் சேர்த்துக் கொண்டு மிரட்டி அரட்டி ஆள்பிடித்து வருகின்றது..

மற்றபடி, ஆரியப் பார்ப்பனியத்தை, இந்திய அதிகாரக் குவியலை, பாசிச பாஜகவை வீழ்த்த வேண்டும் எனும் உணர்வு வெகு மக்களிடையே பரவலாக உருவெடுத்து வருகிற இன்றைய காலச் சூழலைப் பயன்படுத்தி பாசிச எதிர்ப்பாளர்கள், பார்ப்பனிய எதிர்ப்பாளர்கள், வல்லரசிய எதிர்ப்பாளர்கள், சாதிய எதிர்ப்பாளர்கள் தலைமை கொடுத்துப் போராட வேண்டிய காலம் இது..

2024 - இன் ஆட்சி மாற்றம் என்பது கட்சி மாற்றமாக மட்டுமல்லாது.. குறைந்த அளவிலாவது பாசிச அதிகாரக் குவியலை வீழ்த்தி அடிசாய்க்கிற அதிகார மாற்றமாகவும் அமைய வேண்டும்..

## காசுமீரத்தை அழித்த பாரதீயர்கள்..இன்றைக்கு மணிப்பூரை அழிக்கிறார்கள்.. பாரதத் தாய் எனப் பசப்புகிறவர்கள் மணிப்புரிப் பெண்களைப் பாலியல் வன்கொடுமை செய்கிறார்கள்..

**அழியட்டும் பார்ப்பனிய பாசிச வெறியர்கள்.. ஒழியட்டும் பாசிச பாரதீய நரியர்கள்..**

**மணிப்பூர் கொடுமைகளுக்குக் காரணமான முதல்வர் பீரேன் சிங்கைக் 'கைது' செய்!**

**பேரழிப்புகளைத் தூண்டிவிட்ட அமித்சாவை நீக்கு! நரேந்திர மோடியே பதவி விலகு!**

# தில்லைக் கோயிலை தீட்சிதர்களிடம் இருந்து மீட்டெடுப்போம்!

**பேராசிரியர் த. செயராமன்,**
தமிழ்மண் தன்னுரிமை இயக்கம்.

அண்மைக் காலத்தில் அனைவரது கவனத்தையும் சிதம்பரம் கோயில் ஈர்த்திருக்கிறது. சிதம்பரம் கோயிலில் உள்ள தீட்சிதர்கள் கோயில் தங்களுக்கே சொந்தம் என்று உரிமை கொண்டாடி வருவதோடு, இன்றளவும் தீண்டாமையைக் கடைப்பிடித்து வருகிறார்கள்.

கோயிலில் சிற்றம்பல மேடையில் பிறசாதிகள் எவரும் ஏறக்கூடாது என்று தடை விதிக்கிறார்கள். தமிழில் தேவாரம் பாடுவதை எதிர்க்கிறார்கள்; தடுக்கிறார்கள். கோயிலுக்கு வந்த பெண்களைத் தாக்குகிறார்கள். ஒடுக்கப்பட்ட சமூகத்தவர்களை இழிவாகப் பேசி வன்கொடுமைச் சட்டத்தின் கீழான குற்றங்களைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள். கோயிலில் உள்ள பொதுச் சொத்துக்கும், கோயில் வருமானத்திற்கும் கணக்குத் தர மறுக்கிறார்கள். பல்வேறு ஒழுக்கக்கேடான செயல்பாடுகள் அங்கே நடைபெறுவது பற்றிய செய்திகள் வருகின்றன. இந்நிலையில், கோயிலின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தவும், சட்டவிரோத செயல்பாடுகளைத் தடுக்கவும், தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஆனால் தமிழ்நாடு அரசு எடுக்கும் முயற்சிகளைத் தீட்சிதர்கள் எதிர்க்கிறார்கள். இந்தியா முழுவதும் நிலைபெற்றிருக்கும் பார்ப்பன சக்திகளையும், அவர்களின் அதிகார வலிமையையும் , இந்திய நடுவண் அரசில் அதிகாரம் செலுத்தும் பா.ஜ.க.வின் அதிகாரத்தையும், அதிகார வர்க்கத்தில் இருக்கும் பார்ப்பன பெரிய மனிதர்களின் செல்வாக்கைப் பயன்படுத்தியும், உச்சநீதிமன்றத்தில் செல்வாக்குள்ள பார்ப்பனர்களைக் கொண்டு வழக்காடியும், உச்சநீதிமன்றத்தில் உள்ள நீதிபதிகளின் பார்ப்பனச் சார்புத் தன்மையை உசுப்பிவிட்டும், சாதகமான தீர்ப்புகளைப் பெற்றுத் தில்லைக் கோயிலைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். தமிழ்நாடு அரசு செயல் அலுவலர்களை நியமிக்கும் போதெல்லாம் நீதிமன்றத்தின் உதவியோடு அதைத் தீட்சிதர் கும்பல் முறியடிக்கிறது. இதற்குப் பார்ப்பன அரசியல்வாதிகளும், பார்ப்பன வழக்கறிஞர்களும், அனைத்துத் துறையிலும் இருக்கக்கூடிய பார்ப்பன சக்திகளும், சங்கங்களும், ஆர். எஸ். எஸ்□ சங் பரிவார் அமைப்புகளும் துணையாக நிற்கின்றன.

சிதம்பரம் கோயிலில் உள்ள சிற்றம்பலம் சீட்டுக்கட்டு மேடையாகவும், ஆயிரங்கால் மண்டபம் தீட்சிதர்களின் மதுபான விடுதியாகவும், ராஜகோபுரம் பாலியல் செயல்பாட்டிடமாகவும் விளங்குவதாக நீண்ட காலத்திற்கு முன்பே விமர்சிக்கப்பட்டிருக்கின்றன. தீட்சிதர்களுக்கிடையே சண்டைகளும், கத்திக்குத்தும் எனப் பல கிரிமினல் குற்றங்கள் தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கின்றன. கோயிலுக்குள் இரண்டு கொலைகளும் கூட நடந்திருக்கின்றன. சோழ மன்னர்கள் வேய்ந்த பொற்கூரையில் சில ஓடுகளைக் காணவில்லை என்றும், நகைகள் குறைந்துள்ளன என்றும் செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

தில்லைக் கோயிலில் இன்றுவரை மொழித் தீண்டாமையும், மக்கள் மீது இனவொதுக்கல் தீண்டாமையும், பெண்கள் மீது இனப் பாகுபாடும் காட்டப்படுகிறது. கடந்த 2000 இல், சிற்றம்பலத்தில் மேடை ஏறி தேவாரம் பாடச் சென்ற ஆறுமுகசாமி ஓதுவார் அடித்து விரட்டப்பட்டார். நீண்ட போராட்டத்திற்குப் பிறகு தமிழ்நாடு அரசு 2008 பிப்ரவரி 29ஆம் நாள் பக்தர்கள் அனைவரும் சிற்றம்பலத்தில் ஏறி தேவாரம் பாடலாம் என்ற ஆணை பிறப்பித்த பிறகும் எவரும் தீட்சிதர்களால் அனுமதிக்கப்படவில்லை. 2008 மார்ச் 2 ஆம் நாள் சிற்றம்பல மேடையில் தக்க துணையோடு மேடை ஏறித் தேவாரப் பாடலைப் பாட ஓதுவார் ஆறுமுகசாமி முற்பட்டபோது தீட்சிதர்கள் கருவறையை மூடினார்கள்; மாமிசமலைகளாக வரிசை கட்டி, நடராசரை மறைத்து மனித சுவர் அமைத்தார்கள். கத்தினார்கள்; ஊளையிட்டார்கள்; இழிவாகப் பேசினார்கள்; ஆறுமுகசாமியையும் காவல்துறையையும் கூட தாக்கினார்கள். அன்று கைது செய்யப்பட்ட ஆறுமுகசாமி உள்ளிட்டோர் மார்ச் 5 ஆம் நாள் விடுதலை செய்யப்பட்டு, மார்ச் 6□ஆம் நாள் மீண்டும் சிற்றம்பல மேடையேறி தேவாரம் பாடினார். கடுமையான போராட்டங்களுக்குப் பிறகு இது சாத்தியமானது. தமிழும் தமிழர்களும் திருச்சிற்றம்பல மேடை ஏறிப் பாடிய முக்கிய கட்டம் அது. ஆனாலும், பிரச்சினை முடிந்து விடவில்லை. இன்று வரை சிற்றம்பல மேடை ஏறுவது என்பது தீட்சிதர்களால் ஏற்றுக் கொள்ளப்படாத ஒன்றாகவே இருக்கிறது. 2020 பிப்ரவரி 13 ஆம் நாள் சிதம்பரத்தைச் சேர்ந்த செயசீலா என்ற பெண்மணி சிற்றம்பல மேடையேறி வழிபட முற்பட்ட நிலையில், தீட்சிதர்கள் தகாத சொற்களால் வசைபாடி, அவரை வெளியேற்றினார்கள். தீட்சிதர்கள் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. 2022 மே 17 ஆம் நாள் சிற்றம்பலத்தில் ஏறி பக்தர்கள் பாடி வழிபடுவதை அனுமதித்து தமிழ்நாடு அரசு ஓர் அரசாணையை வெளியிட்டது. ஆனாலும் எதையும் மதிக்க தீட்சிதர்கள் தயார் இல்லை.

தமிழ்நாடு அரசின் நிர்வாகக் கட்டுப்பாடுகளை ஏற்கவும் தீட்சிதர்கள் தயாரில்லை. 2022 மே 26 அன்று, இந்து சமய அறநிலையத்துறை சூன் 7 மற்றும் 8 ம் நாள்களில் கணக்குத் தணிக்கை குறித்து ஆய்வு செய்ய வருவதாக ஒரு அறிவிக்கையை தீட்சிதர்களுக்கு அனுப்பியது. அதை ஏற்க மறுத்து, மறுப்பு அறிக்கையை அனுப்பினார்கள். 2014இல் அவர்கள் பெற்ற உச்சநீதிமன்ற தீர்ப்பு அவர்களுக்கு அரணாக இருப்பதாகவும், தமிழ்நாடு அரசின் அறிவிக்கை நீதிமன்ற அவமதிப்பு என்றும் கூறி, தங்கள் கோயில் நிர்வாகத்தை அரசுஆய்வு செய்வதைக் கடுமையாக எதிர்த்தார்கள். இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு 7 6 2022 அன்று நேரில் சென்று தீட்சிதர்களிடம் நயமாகப் பேசி ஒத்துழைப்பு கொடுங்கள் என்று வேண்டினார். அதன்பிறகு, இந்து சமய அறநிலையத்துறையின் பழனி கோயிலின் இணை ஆணையர், கடலூர் இணை ஆணையர் உள்ளிட்டு ஆறு பேர் சிதம்பரம் கோயிலின் கணக்குகளைப் பார்வையிடச் சென்றபோது தீட்சிதர்கள் கோயில் கணக்கைத் தர மறுத்துவிட்டார்கள். அப்போதும் தங்களுக்கு உச்சநீதிமன்றத் தீர்ப்பு ஆதரவாக இருக்கிறது என்றும், கணக்குகள் தரத் தேவையில்லை என்றும் கூறினார்கள்.

2023 ஆம் ஆண்டு ஆனி திருமஞ்சண விழாவையொட்டி, சூன் 24 முதல் சூன் 27 வரை சிற்றம்பலத்தில் வழிபட அனுமதி இல்லை என்று ஒரு பதாகையை தீட்சிதர்கள் இந்து சமய அறநிலையத்துறையிடம் அனுமதி கேட்காமலே வைத்தார்கள். தமிழ்நாடு அரசின் அரசாணையை நடைமுறைப்படுத்தச் சென்ற இந்து சமய அறநிலையத்துறையின் தில்லை அம்மன் கோயில் செயல் அலுவலர் சரண்யா, வட்டாட்சியர் செல்வகுமார் மற்றும் காவல்துறை பெண்காவலர்கள் இந்தப் பதாகையை நீக்க முற்பட்டபோது அவர்களை எதிர்த்துத் தீட்சிதர்கள் தகராறு செய்தார்கள். கற்பக கணேச தீட்சிதர் என்பவர் தன் பூணூலைத் தானே கழற்றித் தூக்கி எறிந்து விட்டு பூணூல் அறுந்து போகும் அளவுக்கு தன்னைத் தாக்கியதாக நான்கு பெண் போலீசார் மீது புகார் கொடுத்தார். அறநிலையத்துறை பெண் அதிகாரியின் கை தன் கணவர் மீது பட்டு விட்டதாகக் கூறி ஒரு தீட்சிதரின் மனைவி ஏக வசனத்தில் அதிகாரிகளை வசை பாடினார். இந்து அறநிலையத்துறை அதிகாரிகளும் காவல் துறையும் திரும்பிச் செல்ல நேர்ந்தது. அறநிலையத்துறை இணை ஆணையர் அனுமதி பெற்றுத் தான் பதாகை வைத்ததாக பொய் பேசினார்கள். கோயில் பூஜைகள் நிறைய இருப்பதால்தான் அனுமதிக்கவில்லை என்று விளக்கம் வேறு கூறினார்கள். பதாகையை சூன் 26 ஆம் நாள் இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் காவல்துறையுடன் வந்து நீக்கினார்கள்.

தீட்சிதர்களின் அடாவடித்தனத்தால் அதிகாரிகளே இந்தப் பாடுபட்டால், எளிய மக்களை தீட்சிதர்கள் என்ன பாடுபடுத்துவார்கள்? இந்தப் பதாகையை 26.06.2022 அன்று இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் நீக்கினார்கள். அதே நாள் கோவிலில் சாமியை வழிபட வந்த சிவபுரி கிராமம் கார்வண்ணன் என்பவரை தீட்சிதர்கள் கன்னத்தில் அறைந்து தாக்கினர். அதற்கு வீடியோ பதிவும் உள்ளது. காவல்துறையிடம் இது குறித்துப் புகார் செய்யப்பட்டது. சிதம்பரம் கோயில் தீட்சிதர்களுக்குச் சொந்தமானது என்றும், போனால் போகிறது என்றுதான் வழிபடுவதற்கு பொதுமக்களை அனுமதிக்கிறோம் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். தீட்சிதர்கள் தொடர்ந்து குழந்தைத் திருமணங்களை நடத்தி வருகிறார்கள். 2022 அக்டோபா மாதம் தீட்சிதர்கள் செயலாளர் ஹேமசபேச தீட்சிதர் தன் 13 வயது மகளுக்குத் திருமணம் செய்வித்ததாகக் கைது செய்யப்பட்டார். மணமகள் தந்தை வெங்கடேச தீட்சிதரும் கைது செய்யப்பட்டார். ஒரே ஆண்டில் 4 தீட்சிதர் குழந்தைத்திருமணங்கள் நடந்துள்ளன. ஆனால், இதை மறைக்க அரசு அதிகாரிகளைக் குற்றவாளியாக்கும் வேலையைத் தீட்சிதர்கள் செய்கிறார்கள். கூடுதலாக, தமிழ்நாடு அரசை எதிர்த்துக் காழ்ப்புணர்வுடன் ஆளுநர் ஆர்.என். ரவி களமிறங்கினார். தீட்சிதர்கள் வீட்டுப் பெண்களை கன்னித்தன்மை பரிசோதனை நடத்தி தமிழ்நாடு அரசு கொடுமைப்படுத்தி விட்டதாக ஊடகங்களில் கருத்தைப் பதிவு செய்தார். மனித உரிமை கமிசனில் புகார் செய்தார்கள். ஆளுநரே நேரடியாக ஆள் அனுப்பி தீட்சிதர் குடும்பங்களுடன், அந்தப் பெண்களிடம் விசாரித்து செய்தி சேகரித்ததாகக் கூறினார். பார்ப்பன நலன் காப்பதையே அடிப்படை இலக்காகக் கொண்ட பார்ப்பன, பாஜக உள்ளிட்ட அமைப்புகள் களம் இறங்கி தமிழ்நாடு அரசை அவதூறு பேசின. சிதம்பரம் தீட்சிதர் மேலாதிக்கத்தை இவர்கள் தனித்துப் பார்க்கவில்லை. எதிர்கால இந்து ராஷ்டிரத்தின் ஒரு கூறாகவே பார்க்கிறார்கள். இந்நிலையில், சிதம்பரம் கோயிலைத் தீட்சிதர்களிடமிருந்து மீட்பதை இந்துத்துவ பார்ப்பனிய இந்துராஷ்டிர உருவாக்கத்திற்கு எதிரான போரின் ஒரு கூறாகவே கருத வேண்டும்.

தில்லைக்கோயிலில் தமிழர் உரிமை மறுப்புத் தொடர்கிறது. இப்படியே பிரச்சனை நீண்ட நாட்களுக்குத் தொடர முடியாது. ஆகவே தில்லைக் கோயிலை தீட்சிதர்களிடமிருந்து மீட்க வேண்டிய உடனடித் தேவை இருக்கிறது. இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தால்தான் பல பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

## இந்தக் கோயில் யாருக்குச் சொந்தமானது? தீட்சிதர்களுக்கு இக்கோயில் மீது உரிமை கொண்டாட ஏதாவது சான்றுகள் இருக்கின்றனவா?

*சிதம்பரம் கோயில் தீட்சிதர்களுடையது என்று சொல்ல எந்த சான்றும் இல்லை என்பதை 1890 ஆம் ஆண்டு நீதிபதி சர். தி. முத்துசாமி ஐயர் மற்றும் நீதிபதி ஷே.ஷே.ஷெப்பர்டு ஆகியோர் தங்கள் தீர்ப்பில் தெளிவாகக் கூறியுள்ளனர். அதே போன்று, தீட்சிதர்கள் தங்களுக்குச் சாதகமான உச்சநீதிமன்றத் தீர்ப்பு என்று கூறும் 2014 ஆம் ஆண்டு தீர்ப்பும் கூட கோயில் தீட்சிதர்களுக்குச் சொந்தமானது என்று கூறவில்லை. கோயில் தீட்சிதர்களுக்குச் சொந்தமானது என்று கூற ஏதாவது சான்று உள்ளதா என்று நீதிபதிகள் கேட்டதற்குச் சுப்ரமணிய சுவாமி அப்படி எதுவும் இல்லை என்று கூறினார். ஆகவே, தில்லை கோயில் தீட்சிதர்களுக்கு உரிமையானது என்று சட்டப்படி கூற சான்றுகளும் இல்லை; தீர்ப்புகளும் இல்லை.*

*தீட்சிதர்கள் தமிழர்களும் இல்லை. தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் தில்லைவாழ் அந்தணர்களும் இவர்கள் இல்லை. கோயிலை இவர்கள் கட்டவும் இல்லை; இவர்கள் உரிமை கோருவதுபோல தில்லைக் கோயிலின் நிர்வாகம் 20 ஆம் நூற்றாண்டு பாதி வரை இவர்களிடம் இருந்ததும் இல்லை. பதினெட்டாம் நூற்றாண்டில் தொடர்ந்து நடந்த அரசியல் உறுதியற்றத் தன்மை தமிழ்நாட்டில்*

நிலவியபோது, அதைப் பயன்படுத்தி தங்களை கோயில் நிர்வாகத்துக்குள் நிலைப்படுத்திக் கொண்டார்கள். 1925 இல் இருந்துதான் இந்த கோயில் இவர்களது நிர்வாகத்தில் இருக்கிறது என்று கூறலாம். 2014 இல், உச்ச நீதிமன்றம் தீட்சிதர்களுக்குச் சார்பான ஒரு தீர்ப்பை வழங்கிய போதுகூட, கோயில் நிர்வாகத்தில் தமிழ்நாடு அரசின் தலையீட்டை அது மறுக்கவில்லை. தமிழ்நாட்டில் உள்ள சைவக் கோயில்களில் முக்கியமான கோயில்களில் ஒன்று சிதம்பரத்தில் உள்ள நடராசர் கோயில். இக்கோயிலிலிருந்து படி எடுக்கப்பட்ட 315 கல்வெட்டுகளும், 20 செப்பேடுகளும் உள்ளன. கி.பி. பத்தாம் நூற்றாண்டு வரை சோழர்கள் காலத்தில் தில்லை முக்கியத்துவம் பெற்றிருந்தது. அதன் பிறகு தஞ்சாவூர் முக்கியத்துவம் பெற்றது.

கடந்த காலத்தில் சோழர், பல்லவர், விஷய நகர அரசுகளால் இக்கோயில் கட்டப்பட்டு, புனரமைக்கப்பட்டு வந்துள்ளது. சோழ மன்னர்களில் ஆதித்ய சோழன் (கிபி 871 -907) முதலாம் பராந்தகன் (கி.பி.907- 955) முதலாம் குலோத்துங்கன் (கி.பி.1070 1122) விக்கிரமச் சோழன் (கி.பி.1118- 1135), முதலாம் குலோத்துங்க சோழனுடைய தளபதி நரலோக வீரன், மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆகியோரால் காலா காலமாக கட்டப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது.சோழர்களின் ஆட்சியில் சிற்றரசனாக இருந்த கோப்பெருஞ்சிங்கன் காடவராயன் (கி.பி. 1216-1242) இக்கோயிலின் தெற்கு வாயிலைக் கட்டியதோடு பல்வேறு கோயிற்பணிகளைச் செய்தான். ஆதித்ய சோழனும், பராந்தக சோழனும் இக்கோயிலுக்குப் பொன் கூரை வேய்ந்தார்கள். முதலாம் ராஷேந்திர சோழனின் மகள் வயிற்றுப் பேரன் முதலாம் குலோத்துங்கன் மற்றும் அவனுடைய படை தளபதி நரலோக வீரன் இக்கோயிலின் பெரு வளர்ச்சிக்குப் பங்காற்றினாகள். கிபி 12 மற்றும் 13ம் நூற்றாண்டுகளில் கோயிலின் கோபுரங்கள் கட்டப்பட்டன. கோயிலின் கிழக்குக் கோபுரத்தை விக்ரமச்சோழனும், மேற்குக் கோபுரத்தை சுந்தரபாண்டியனும், தெற்குக் கோபுரத்தை கோப்பெருஞ்சிங்கன் காடவராயனும், வடக்குக் கோபுரத்தை கிருஷ்ணதேவராயரும் கட்டினார்கள். இக்கோயிலின் முதல் பிரகாரம் விக்ரமச்சோழன் திருமாளிகை என்றும், இரண்டாம் பிரகாரம் குலோத்துங்கச் சோழன் திருமாளிகை என்றும், மூன்றாம் பிரகாரம் தம்பிரான் திருவீதி என்றும் அழைக்கப்படுகிறது. இக்கோயிலின் மதிலை நரலோக வீரன் கட்டினான். இவ்வாறு சோழ, பாண்டிய, விஷயநகரப் பேரரசு மற்றும் சிற்றரசர்கள், தளபதிகள் ஆகியோருடைய பங்களிப்பால் இக்கோயில் பெருவளர்ச்சி பெற்றது. இச்செய்திகளிலிருந்து சிதம்பரம் கோயில் பல்வேறு மன்னர்களாலும் சிற்றரசர்களாலும் தளபதிகளாலும் கட்டப்பட்டது என்பதை ஐயமறத் தெரிந்து கொள்ளலாம்.

மன்னர்களால் கட்டப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு வந்த இக்கோயில் 1925-க்கு பிறகு தீட்சிதர்களின் கட்டுப்பாட்டுக்கு வந்துவிட்டது. 19- ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே கோயிலுக்குத் தீட்சிதர்கள் சொந்தம் கொண்டாடத் தொடங்கினார்கள். ஆனால் அவர்களுக்கு கோயில் உரிமை என்பது கிடையாது. அவர்கள் கோயிலில் பணியாளர்களாக நியமிக்கப்பட்டவர்கள்..அரசர்களால் இத்தலத்திற்கு மானியங்களும் வழங்கப்பட்டுள்ளன.

## தில்லை நடராசர் கோவில் தீட்சிதர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்ததா?

தில்லை நடராசர் கோவில் மன்னர்களாலும், மன்னர்களால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளாலும் நிர்வகிக்கப்பட்டு வந்தது. முதலில் சோழர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. பின்னர் விஜயநகர மன்னர்களாலும், தஞ்சை நாயக்க மன்னர்கள் மற்றும் பாளையக்காரர்களாலும் நிர்வகிக்கப்பட்டு வந்தது.

ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில், நீதிக்கட்சியின் முதல்வரான பனகல் அரசர் ராமராயநிங்கர், 1922 ம் ஆண்டு `இந்து சமய அறக்கட்டளைச் சட்டம்' (The Madras Hindu Religious Endowment Act) கொண்டு வந்தார். 1927 ம் ஆண்டு இந்து சமய அறநிலைய வாரியம் உருவாக்கப்பட்டது. கொள்ளையடிக்கப்பட்ட கோயில் சொத்துகளை மீட்கவும், கணக்கு வழக்கற்ற சொத்துகளை ஆவணப்படுத்தி அரசு பதிவேட்டில் ஏற்றவும், கோயிலின் நிர்வாகத்தை அரசு கட்டுப்பாட்டில் கொண்டு வரவும் நீதிக்கட்சி இந்த வாரியத்தை உருவாக்கியது. பின்னர், அது மாற்றியமைக்கப்பட்டு, தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலையத் துறையாக 1960 முதல் நடைமுறைக்கு வந்தது. தமிழக அரசு 36,612 கோயில்களையும், 56 மடங்களையும், 1721 அறக்கட்டளைகளையும் இந்து அறநிலையத்துறையின் கீழ் நிர்வாகம் செய்து வருகிறது. ஆனால் தீட்சிதர்கள் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டை எதிர்த்து சிதம்பரம் பொதுக்கோயில் மீது சொந்தம் கொண்டாடி வருகிறார்கள்.

தீட்சிதர்கள் பொதுக் கோயிலான சிதம்பரம் கோயில் மீது தனிஉரிமை கோரி 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிரச்சினையை எழுப்பியுள்ளனர்.
சிதம்பரம் நடராஜர் கோயில் நிர்வாகத்தை யார் நடத்துவது என்பது தொடர்பாக 1888ஆம் ஆண்டிலேயே சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது. அப்போது இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதிகள் சர் தி. முத்துச்சாமி ஐயர் மற்றும் ஜே.ஜே.செப்பர்டு, “சிதம்பரம் கோயில் தீட்சிதர்களின் தனிச் சொத்து என்று சொல்வதற்கு எந்தவொரு ஆதாரமும் இல்லை” என்று தீர்ப்பளித்தனர் (A.S.Nos.108 and 159 of 1888 Dt 17.3.1890).

அதுபோன்றே 1939இல் வெளியான மெட்ராஸ் உயர் நீதிமன்றத் தீர்ப்பு இக்கோயிலை நிர்வகிப்பதற்கு அரசாங்கம் வகுத்தத் திட்டம் (Scheme)என்பது செல்லுபடியாகும் என்று தீர்ப்பளித்தது. அதன் பின்னர் 1951 ஆம் ஆண்டில் குமாரசாமி ராசா முதல்வராக இருந்தபோது, கோயிலை அரசின் சட்ட வரம்புக்குள் கொண்டுவருவதற்கெனப் பிறப்பிக்கப்பட்ட ஆணையை சென்னை உயர் நீதிமன்றம் இரத்து செய்தது. அவருக்குப் பிறகு பொறுப்பேற்ற இராஜாஜி முதலமைச்சராக இருந்த காலத்தில், தீர்ப்பை எதிர்த்து தமிழக அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. ஆனால், 1953 இல் அந்த மேல்முறையீட்டு மனு திரும்பப் பெறப்பட்டது. ஆகவே சென்னை மாகாண அரசு தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அதனால் அந்தக் கோயிலின் நிர்வாகம் தீட்சிதர்கள் வசமே தொடர்ந்தது.

இந்து சமய அறநிலையத்துறையின் சட்ட விதி 107 இன்படி ஒரு கோயில் "வகையறா கோயில்" (demomination temple) ஆக இருந்தால் அதை நிர்வகிக்கும் அதிகாரம் தமிழக அரசுக்கு இல்லை. இதையே சாதகமாகப் பயன்படுத்தி, தீட்சிதர்கள் தாங்கள் ஒரு இந்து சமயப் பிரிவினர் (Religious denomination) என்றும், சிதம்பரம் கோயில் ஒரு இந்து சமயப் பிரிவினருக்கான "வகையறா கோயில்" என்றும் நிறுவ முற்படுகின்றனர். அதற்காக பொய்யான வாதங்களை வைத்து வருகின்றனர்.

சிதம்பரம் நடராசர் கோயில் நிர்வாகத்தை தீட்சிதர்களிடமிருந்து 1981 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறை தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. 1939 ஆம் ஆண்டின் திட்டத்தை (Scheme) செயல்படுத்த பார்வையாளர்களை நியமனம் செய்தது. தீட்சிதர்கள் இதை எதிர்த்து வழக்குத் தொடுத்தார்கள். 1987 ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசு சிதம்பரம் கோயிலை நிர்வகிக்க ஒரு செயல் அலுவலரை நியமித்தது. தமிழ்நாடு அரசின் இச்செயலை இரத்து செய்யக் கோரி, தீட்சிதர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். 10 ஆண்டுகளுக்குப் பின் தீட்சிதர்களின் வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது (1997). தமிழ்நாடு அரசிடம் சீராய்வு மனு அளிக்குமாறு தீட்சிதர்களை நீதிமன்றம் நெறிப்படுத்தியது. 2004 இல் தீட்சிதர்கள் சீராய்வு மனு அளித்தனர். அதுவும் அரசால் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆகவே 2009 இல் இதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் தீட்சிதர்கள் ரிட் மனு தாக்கல் செய்தார்கள். 2009 இல் ரிட் மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. 2009 பிப்ரவரி 2 ஆம் நாள், தீட்சிதர்களின் ரிட் மனு தள்ளுபடி ஆன உடனேயே, இரவு எட்டு மணிக்கு நிர்வாக அதிகாரி கோயிலுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டார். இந்த ரிட் மனு தள்ளுபடியை எதிர்த்து இரண்டு தீட்சிதர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்கள்.

அதன் மீது 2009 பிப்ரவரியில் தீர்ப்பளித்த நீதிபதி பானுமதி, கோயில் நிர்வாக அதிகாரியைத் தமிழக அரசு நியமித்தது செல்லும் எனத் தெளிவுபடுத்தியதோடு, நிர்வாக அதிகாரிக்கு ஒத்துழைப்புத் தருமாறு தீட்சிதர்களுக்கு உத்தரவிட்டார். ஆனால், அந்தத் தீர்ப்பையும் தீட்சிதர்கள் ஏற்காமல் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். அந்த மனு மீது 2014 இல் உச்ச நீதிமன்றம் மிகக் கோளாறான தீர்ப்பு ஒன்றை வழங்கியது.

சிதம்பரம் கோயிலுக்கான தமிழ்நாடு அரசின் செயல் அலுவலரின் நியமனத்தை எதிர்த்து, தீட்சிதர்கள் மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் மூத்தத் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி சார்பில் தனித் தனி மனுக்கள் இந்திய உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

இதற்கிடையே தீட்சிதர்கள், இந்து சமய அறநிலையச் சட்டம் தங்களுக்குப் பொருந்தாது என்றும், ஏனென்றால் தாங்கள் இந்து சமயத்துக்குள்ளேயே தனியான சைவ சமய உட்பிரிவினர் என்றும் கூறி, ஒரு மேல் முறையீட்டு மனுவை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். எனவே இது குறித்து முடிவு எடுத்த பின்னரே இறுதித் தீர்ப்பு வழங்க இயலும் எனக் கூறி 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், உச்ச நீதிமன்றம் தீர்ப்பை ஒத்தி வைத்தது. இந்த வழக்கை விசாரித்த இந்திய உச்ச நீதிமன்றம் 7 சனவரி 2014 அன்று சிதம்பரம் நடராசர் கோயில் நிர்வாகத்தைப் பொது தீட்சிதர்களே நிர்வகிக்கலாம் என்றும், அக்கோயிலுக்குத் தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறை மூலம் நியமித்த செயல் அலுவலர் நியமனம் செல்லாது எனவும் தீர்ப்பு வழங்கியது.

இத்தீர்ப்பை எதிர்த்து தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்ற அமர்வில் மேல் முறையீடு செய்தது. ஆனால், உச்ச நீதிமன்ற அமர்வு, சிதம்பரம் நடராசர் கோயிலை தீட்சிதர்களே நிர்வாகம் செய்து கொள்ளலாம் என்றும், கோயில் நிர்வாகத்தில் தமிழ்நாடு அரசு தலையீடு செய்யக்கூடாது என்றும் 8 ஏப்ரல் 2019 அன்று தீர்ப்பு வழங்கியது.

தமிழ்நாடு அரசு மீண்டும் 2014 தீர்ப்பை மறுத்து மேல்முறையீடு செய்ய வேண்டும். 2014 இல் தமிழ்நாடு அரசு உரிய ஆவணங்களை உச்சநீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. அனுபவம் வாய்ந்த வழக்கறிஞரை அனுப்பி வழக்காடவில்லை. தமிழ்நாடு அரசின் ஒத்துழைப்புடன் தீட்சிதர்கள் வழக்குக்குப் போனார்கள். சுப்பிரமணியசாமி கூறிய திராவிட இயக்கத்திற்கு எதிரான அவதூறு கருத்துகளை செவிமடுத்த நீதிபதிகள் சவுகான், பாப்டே ஆகியோரிடமிருந்து தங்களுக்குச் சாதகமான ஒரு தீர்ப்பைப் பெற்றார்கள். அதே நிலை இப்போதும் நீடிக்கும் என்று கூற முடியாது. அனைத்து ஆவணங்களும் இந்து சமய அறநிலையத்துறையிடம் உள்ளன. அவற்றை அனுபவம் வாய்ந்த வழக்கறிஞரின் மூலம் மேல்முறையீடு செய்தால் இந்த வழக்கில் தமிழ்நாடு அரசு வெற்றி பெறலாம் ஆகவே இந்த வழக்கை தமிழ்நாடு அரசு உடனடியாக மேல்முறையீடு செய்ய வேண்டும் என்று கோருகிறோம்.

இன்று தில்லைக் கோயிலுக்குச் சொந்தம் கொண்டாடும் தீட்சிதர்கள் தில்லைவாழ் அந்தணர்கள் அல்லர். இன்றைய தீட்சிதர்கள் தமிழ் மண்ணுக்கு அந்நியர்களே என்பதை பல அறிஞர்கள் கூறியுள்ளனர். முனைவர் பி.ஜி.எல். சுவாமி, Chidambaram and Nataraja : Problems and Rationalization (1979) என்ற ஆய்வு நூலில் இன்றைய தீட்சிதர்கள் காஷ்மீரத்திலிருந்து வந்தவர்கள் என்றும், அவர்களது மூதாதையர்கள் சிறிய குழுவாக சிதம்பரத்தில் குடியமர்ந்தபோது அவர்களது காஷ்மீரத்து உறவினர்களுடனான உறவு அறுந்து போயிருக்க வேண்டும் என்றும், இதனால் சிதம்பரத்துக்குள் தங்களுக்குள்ளேயே அகமண உறவு கொண்டனர் என்றும் குறிப்பிடுகிறார். பிற இலக்கியச் சான்றுகளை ஆய்வு செய்யும்போது, அவர்கள் கங்கை, யமுனை ஆறுகளுக்கு இடைப்பட்ட தோவாப் பகுதியில் உள்ள 'அந்தர்வேதி'யில் இருந்து வந்தவர்கள் என்று அறிகிறோம். அந்தர்வேதி என்பது கோதாவரி டெல்டா பகுதி என்ற கருத்தும் நிலவுகிறது.

**தமிழ்நாடு இதழுக்காக அண்மையில் நன்கொடை வழங்கியவர்கள்..**

| | |
|---|---|
| தோழர் அறிமண் | 2000 |
| திரு. தென்முகநம்பி (சூலை மாத நன்கொடை) | 1000 |
| திரு. திருந்தலையன் | 120 |
| தேவக்கோட்டைத் தோழர்கள் | 2000 |

கிபி மூன்றாம் நூற்றாண்டில் களப்பிரர்கள் தமிழகத்துக்குள் புகுந்து மூன்று முடியுடை வேந்தர்களையும் தங்கள் அதிகாரத்துக்கு உட்படுத்தினார்கள். கொடும்பாளூர் பகுதியில் தன் அதிகாரத்தை நிலைநாட்டிக் கொண்ட ஒரு களப்பாளர் கூற்றுவ நாயனார் என்ற சிவபக்தர் என்று அவரைப் பற்றி பெரிய புராணத்தில் சேக்கிழார் பேசுகிறார். சோழ மன்னர்களுக்குத் தில்லைவாழ் அந்தணர்களே முடி சூட்டும் மரபு இருந்தது என்றும், கூற்றுவநாயனார் தனக்கு முடி சூட வேண்டும் என்று கேட்டபோது, சோழர்களைத் தவிர வேறு எவருக்கும் முடி சூடுவதில்லை என்று கூறிவிட்டு, சோழர் மணிமுடியை ஒரு தில்லைவாழ் அந்தணர் குடும்பத்தவரிடம் மட்டும் ஒப்படைத்துவிட்டு, அனைத்துத் தில்லைவாழ் அந்தணர்களும் மலைநாடு (கேரளா) சென்று விட்டதாக சேக்கிழார் பெரிய புராணத்தில் குறிப்பிடுகிறார். கூற்றுவ நாயனார் என்ற அச்சுத களப்பாள மன்னன் சிவபெருமானின் அடியையே முடியாகச் சூட்டிக்கொண்டான் என்று பெரியபுராணம் கூறுகிறது. அவனுடைய காலம் கி.பி. மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டாக இருக்கலாம். அதன்பின்னர், சிதம்பரம் கோயில் பற்றிய செய்தி கோச்செங்கணான் காலத்தில் வருகிறது, கோச்செங்கணானுடைய காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்பதே சரியானதாக இருக்கும். இடைப்பட்ட காலத்தில் தில்லைக் கோயில் பற்றிய செய்தியோ தில்லை வாழ் அந்தணர்கள் பற்றிய செய்தியோ இல்லை. தில்லைவாழ்அந்தணர்களே மலைநாட்டிலிருந்து மீண்டும் திரும்ப வந்தார்கள் என்று கூறுவதற்கில்லை. ஏனெனில், தீட்சிதர்கள் போற்றுகின்ற 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கோயில் புராணம் மற்றும் தொடர்புடைய நூல்களில், அவர்கள் அந்தர் வேதியில் இருந்து வந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

தில்லைவாழ் அந்தணர்கள் என்று தமிழ் இலக்கியங்கள் தில்லை பூசகர்களை அழைக்கின்றன. "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியார்" என்று ஏழாம் திருமுறை திருத்தொண்டர் திருத்தொகையில் சுந்தரர் தம்மைக் குறிப்பிடுகிறார். தீட்சிதர் என்ற சொல் எந்த தமிழ் இலக்கியத்திலும் மற்றும் எந்தக் கல்வெட்டிலும் வரவில்லை. தொடக்கத்தில் கோயில் பூசகர்களாக நியமிக்கப்பட்ட தில்லைவாழ் அந்தணர்கள் தில்லையை விட்டு ஓடிப் போயிருக்கிறார்கள். மீண்டும் பூசகர்கள் நியமனம் செய்யப்பட்டு மீண்டும் தில்லைக் கோயில் வழிபாடு புதுப்பிக்கப்பட்டது. ஆனால், சுல்தான்களின் படையெடுப்பால் சிதம்பரம் கோயிலில் வழிபாடு நீண்ட காலத்திற்கு நின்று விட்டது. தில்லைக் கோயில் பூசகர்கள் எங்கோ ஓடி மறைந்தனர். தமிழகத்திற்கும் தமிழர்களுக்கும் முற்றிலும் புதிய வேத பார்ப்பனர்கள் இங்கே குடியமர்த்தப்பட்டு இருக்கின்றனர்.

கி.பி 14 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு எழுதப்பட்ட தில்லைக் கோயில் தொடர்புடைய புராணங்கள் மட்டும் தில்லை பார்ப்பனர்களுடன் நடராஜரும் ஒருவர் என புராணக்கதைப் பேசுகின்றன. தீட்சிதர் என்ற சொல் நீண்டகாலப் பயன்பாட்டில் இருந்ததில்லை. இச்சொல் சமீப காலமாகவே பயன்பாட்டில் இருந்து வருகிறது. அந்நியர்களான வேற்றுநாட்டு வேதப் பார்ப்பனர்களுக்குத் தீட்சை கொடுத்து (தகுதி அளிக்கப்பட்டு) இங்கே நியமனம் செய்ததுதான்.

கிபி 14ஆம் நூற்றாண்டு முதல் இரண்யவர்மன் என்பவன் தில்லைக் கோயிலை கட்டியதாக புராணங்கள் கூறுகின்றன. உமாபதி சிவாச்சாரியார் என்னும் பூசகர் தம் கோயில் புராணம் என்னும் நூலில் இதை எழுதுகிறார். சமஸ்கிருத சார்புடையோர் எழுதிய நூல்களான சிதம்பர மகாத்மியம், பண்டாரிகபுர மகாத்மியம், தில்வாவன மகாத்மியம், ஏம சபாநாத மகாத்மியம் போன்றவை தில்லையின் வரலாற்றைப் பற்றி கதை புனைகின்றன. இவை அந்தர் வேதியிலிருந்து தீட்சிதர்கள் வந்ததாகவும், அவர்களுள் நடராசரும் ஒருவர் என்றும், தர்மசாஸ்திரப்படி சிவனுக்கு வேதவிதிப்படிதான் பூசை செய்ய வேண்டும் என்றும், தங்கள் மேலாண்மையை நிறுவத் தேவையான கதைகளை நூல்களாக்கி பரவவிட்டிருக்கிறார்கள். தமிழகத்திலேயே வாழ்ந்த தில்லைவாழ் அந்தணர்களும் அந்தர்வேதியிலிருந்து கொண்டுவரப்பட்ட பூசகர்களும் எப்படி ஒருவராகவே இருக்க முடியும்? தங்கள் மேலாதிக்கத்தை நிரந்தரமாக நிறுவுவதற்காகவே தீட்சிதப் பார்ப்பனர்கள் கதைகளை உருவாக்கிக் கொண்டார்கள்.

பல்வேறு காலகட்டங்களில் சிதம்பரம் கோயிலில் பூசை நீண்ட காலத்திற்கு நிறுத்தப்பட்டு இருக்கிறது. ஒரு முறை 76 ஆண்டுகள், மற்றொருமுறை 37 ஆண்டுகள் வரையிலும் பூசை செயல்பாடுகள் முற்றிலுமாக நிறுத்தப்பட்டன. இக்காலகட்டத்தில் கோயிலை விட்டு வெளியேறிய பூசகர்களே மீண்டும் திரும்பி வந்திருக்க வாய்ப்பில்லை. இந்நிலையில் புதிதாகச் சிலரை தீட்சைக் கொடுத்து தகுதியுள்ளோராக மாற்றி, 'தீட்சிதர்' என்ற பெயருடன் பூசகர்களாக நியமனம் செய்யப்பட்டனர் என்று கருதுவதே சரியானதாகும். ஆகவே இன்று தீட்சிதர்களாக இருக்கக்கூடியவர்கள் தில்லைவாழ் அந்தணர்களின் வழிவந்தவர்கள் அல்ல.*கோயில் நிர்வாகத்திற்கும், தீட்சிதர்களுக்கும் தொடர்பு இருந்ததில்லை*

தில்லை கோயில் நிர்வாகம், அதன் வருமானம், செலவு ஆகியவை தீட்சிதர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது இல்லை. சோழ மன்னர்கள் காலத்தில் கோயில்கள் அரசனுடைய கட்டுப்பாட்டில் இருந்தன. அந்தந்த பகுதி குறுநிலத் தலைவர்கள் மற்றும் ஊர்அவைக்குக் கோயில் நிர்வாகத்தின் மீது அதிகாரம் இருந்தது.

கோயில் பூசகர்களே நிர்வாகம் செய்தல் என்பது வழக்கில் இல்லாத ஒன்று. சிதம்பரம் கோயிலில் 315 கல்வெட்டுகள் படி எடுக்கப்பட்டுள்ளன. மேலும் 20 செப்பேடுகள் சிதம்பரம் கோயில் பற்றி பேசுகின்றன. இவற்றில் கூறப்பட்டுள்ள செய்திகளிலிருந்து அந்தந்த மன்னர்களின் காலத்தில் அரசு அலுவலர்களே நிர்வாகம் செய்தனர் என்று தெரிகிறது. ஸ்ரீ மகேஸ்வர கண்காணி செய்வார், கோயில் நாயகம் செய்வார், திருமாளிகை கூறு செய்வார், ஸ்ரீ காரியம் செய்வார், சமுதாயம் செய்வார், கோயில் கணக்கர் என்ற பெயர்கள் நிர்வாகம் தொடர்பாகக் காணக் கிடைக்கின்றன. இவர்களுக்கு அரசர்கள், சபையார், நாட்டார், நிர்வாகம் தொடர்பாக ஓலை அனுப்பி உள்ளனர். இவர்களில் எவரும் தீட்சிர்கள் அல்லது சிவப்பிராமணர்கள் கிடையாது. கோயிலில் பூசனை வேலை பார்த்தவர்களுக்கு பிராமண போசனம், தளிகை, சட்டிச்சோறு, பிரசாதம் ஆகியவையே வழங்கப்பட்டதாகத் தெரிகிறது.

சோழமண்டல சதகம் (பாடல் 99) ஒரு முக்கிய குறிப்பைத் தருகிறது. அதன்படி டெல்லி சுல்தான் அலாவுதீன் கில்ஜியின் தளபதி மாலிக்கபூர் படையெடுப்பு நிகழ்ந்த கி.பி.1311 க்கு பிறகு 76 ஆண்டுகள் தில்லை கோயிலில் பூசை நடைபெறவில்லை. பிறகு இரண்டாம் அரிகரர் என்ற மன்னரின் அமைச்சர் முத்தய்ய தண்டநாயகன் மீண்டும் நடராசரை எழுந்தருளச் செய்து பூசையைத் தொடங்கி வைத்தான். இந்த 76 ஆண்டுகளில் தில்லையில் இருந்தவர்கள் எங்கு ஓடினார்கள், என்ன ஆனார்கள் என்பதே தெரியாது. பூசகர்கள் புதிதாகவே நியமனம் செய்யப்பட்டிருக்க வேண்டும். அதுமட்டுமின்றி விஜயநகரப் பேரரசின் (கி.பி. 1336 1646) காலத்தில், மற்றும் மதுரை நாயக்கர்கள் (கி.பி.1529 1736), (தஞ்சை நாயக்கர்கள் கி.பி.1532 1673) காலத்தில் கோயில்களில் இருந்த தமிழ் அர்ச்சகர்கள் எல்லாம் வெளியேற்றப்பட்டு அந்த இடங்களில் பிராமணர்கள் நியமிக்கப்பட்டார்கள் என்பதும் அனைவரும் அறிந்த உண்மை. திருவாவடுதுறை ஆதீன வரலாறுக்கு 'அரசவனத்து அறநிலையம்' என்று பெயர். இது (பக்கம் 43) சிதம்பரம் கோயிலில் பூசை நின்று போனதை உறுதிப்படுத்துகிறது.

கிபி 17ஆம் நூற்றாண்டில் (கி.பி.1610) லிங்கம நாயக்கர் என்ற வீரசைவர் உதவியுடன் கும்பகோணம் சைவ வேளாளர் சிவப்பிரகாசம் சிதம்பரம் கோயில் பராமரிப்பு மற்றும் நிர்வாகம் ஆகியவற்றைச் செய்திருக்கிறார். அதுபோன்று கி.பி.1648 வரை சிதம்பரம் கோயிலில் துறையூர் பாளையக்கார ரெட்டியார்களின் நிர்வாகம் நடைபெற்று இருக்கிறது.

பிஜப்பூர் சுல்தான்கள் படையெடுப்பு காலத்தில், கி.பி.1648 இல் கோயிலில் இருந்த நடராசர் சிலை பத்திரமாக எடுத்துச் செல்லப்பட்டு 40 மாதங்கள் குடுமியான்மலைக்கு அருகில் ஒளித்து வைக்கப்பட்டிருந்தது. பிறகு அங்கிருந்து அது மதுரைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, 38 ஆண்டுகள் மதுரையில் பத்திரப்படுத்தப்பட்டு இருந்தது. அதன் பிறகு, அப்போது செஞ்சியையும் தஞ்சையையும் மராட்டியர் ஆண்டு கொண்டு இருந்த நிலையில், செஞ்சியின் அரசனாகிய சாம்போஜியிடம் பரங்கிப்பேட்டை மராட்டிய அலுவலர் கோபால தாதாஜி முன்வைத்த வேண்டுகோளுக்கிணங்க, சாம்போஜியின் சிறிய தந்தையார் மகன் சகசி உதவியுடன், மதுரையிலிருந்து சிதம்பரத்திற்கு நடராசரைக் கொண்டு வந்து மீண்டும் இருக்கையில் நிறுத்தினர். இது 1684 இல் நிகழ்ந்தது. அப்போது குடமுழுக்கு நடத்தியவர் சிதம்பரம் திருச்சிற்றம்பல தவமுனிவர், இச்செய்தி திருவாரூர் கோயிலில் உள்ள நான்கு செப்பேடுகளில் சொல்லப்பட்டுள்ளது.

1702 ல் சிதம்பரம் கோயிலை மேற்பார்வை செய்தவர் பாத பூஷை அம்பலத்தாடும் பண்டாரம் என்பவர். 1711 இல் வேளூர் அம்பலவாண தம்பிரான் என்பவர் நிர்வாகம் செய்தார். அவரிடம் சீர்காழி சீமை ஏழு மாகாணத்தார் மற்றும் "பெரிய வகுப்பு சிறிய வகுப்பு குடியானபேர்" நெல் நன்கொடை அளித்து கோயில் நிர்வாகத்திற்கு உதவினர். இது குறித்த செப்பேட்டில் நடராசர், சிவகாமி அம்மை மட்டுமன்றி, நிர்வாகி அம்பலவாண தம்பிரான் பெயரும் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளது என்று கல்வெட்டு ஆய்வாளர் செ. இராசு பதிவு செய்கிறார்.

1747 இல் சண்முக தம்பிரான் என்பவரிடம் கோயில் நிர்வாகத்திற்காக நன்கொடை அளிக்கப்பட்டிருக்கிறது. ஊரவர், வர்த்தகர், புடவைக்காரர் என்று சகலரும் ஆயிரங்கால் மண்டபம், நான்கு கோபுரங்கள், பஞ்சாட்சர மதில் திருப்பணிக்கு நன்கொடைகள் அளித்துள்ளனர். . இவை பற்றிய செய்திகளை சிதம்பரம் கோயிலுக்குரிய 10 செப்பேடுகளில் உள்ளன. அவை திருவாரூர் கோயிலில் உள்ளன. அவை மட்டுமின்றி அரியலூர் பாளையக்காரர் மழவராயரிடம் சில செப்பேடுகள் உள்ளன.

19ஆம் நூற்றாண்டு தொடக்கம் முதல் 20 ஆம் நூற்றாண்டு நடுப்பகுதி வரை, சிதம்பரம் கோயிலின் நிர்வாகம் பிச்சாவரம் பாளையக்காரரிடம் இருந்தன. சாமிதுரை சூரப்ப சோழனார் (கி.பி.1893 1911), தில்லைக் கண்ணு சூரப்ப சோழனார் (1911 1943), ஆண்டியப்ப சூரப்ப சோழனார் ஆகியோருடைய வீட்டு ஆவணங்கள் இதற்குச் சான்றாக உள்ளன. 1925 வரையிலும் கூட அன்றாடம் அர்த்த சாம பூசை முடித்து, கோயில் சாவி பல்லக்கில் வைத்து பிச்சாவரம் சமீந்தாரிடம் சேர்க்கப்பட்டது. விடியற்காலையில் மீண்டும் அந்த சாவி பல்லக்கின் மூலம் கொண்டுவரப்பட்டு கோயில் திறக்கப்பட்டது. இதில் காலதாமத இடர்பாடுகள் இருக்கவே, தீட்சிதர்களிடமே சாவி இருக்கட்டும் என்று பாளையக்காரர் அனுமதித்ததால், தீட்சிதர்கள் வசம் கோயிலின் சாவி வந்தது. இது 1911 இல் இருந்து 1925க்குள் நிகழ்ந்திருக்க வாய்ப்புள்ளது. சிதம்பரம் கோயிலின் வெள்ளிப்படியில் அமர்ந்து, .வெள்ளை பட்டுடுத்தி, வெள்ளி செங்கோல் ஏந்தி,தலையில் முடித்தரித்துக் கொள்ளும் பிச்சாவரம் பாளையக்காரரின் குடும்பத்தவர் இருக்கிறார்கள். சிதம்பரநாத சூரப்ப சோழனார் வரை இவ்வாறு முடிசூடும் விழா நடைபெற்று இருக்கிறது, அவருடைய துணைவியார் திருமிகு சாந்தி தேவி என்கிற ஜெலஜெகந்தி ஆயாள் அவர்களின் குடும்பம் பல வரலாற்றுப் பதிவுகளைக் கூறுகிறது.

அறிஞர் பெருமக்களும் கூட சிதம்பரம் கோயில் தீட்சிதர்களுடையது அல்ல, அது பொதுமக்களுடையது என்ற கருத்தை இதற்கு முன்னமே முன் வைத்திருக்கிறார்கள். சிதம்பரம் கோயில் யாருக்குச் சொந்தம்? என்ற கருத்தரங்கம் சென்னையில் நடத்தப்பட்டது. அதில் நீதியரசர் கிருஷ்ணசாமி ரெட்டியார், நீதியரசர் சதாசிவம் மற்றும் துணைவேந்தர் சிட்டிபாபு, பேராசிரியர் வெள்ளைவாரனார், ம.பொ. சிவஞானம் உள்ளிட்டோர் பங்கேற்று, சிதம்பரம் கோயில் மக்களுக்கே சொந்தம் என்ற தீர்மானத்தை இயற்றி தமிழ்நாடு அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

தில்லைக் கோயில் தீட்சிதர்களுக்குச் சொந்தமானது அல்ல. அது மன்னர்களால் கட்டப்பட்டு, மக்கள் தலைவர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்திருக்கிறது. இப்போது அது மக்களின் சார்பாக தமிழ்நாடு அரசால் நிர்வகிக்கப்பட வேண்டும். ஆகவே, இந்து சமய அறநிலையத்துறை தில்லைக் கோயிலைக் கையகப்படுத்துவது என்பது சரியானதும், தேவையானதும் ஆகும். 2014 இல் சுப்பிரமணியசாமியின் முன்னெடுப்பில் தமிழ்நாடு அரசு முறையாக ஆவணங்களை உச்சநீதிமன்றத்துக்கு அளிக்காத நிலையில், தமிழ்நாட்டின் சார்பாக மூத்த வழக்கறிஞர் எவரும் உச்ச நீதிமன்றத்திற்கு செல்லாத நிலையில், அந்த வழக்கின் தீர்ப்பு தீட்சிதர்களின் சார்பாக அமைந்துவிட்டது. இப்போது தமிழ்நாடு அரசு மீண்டும் மேல் முறையீடு செய்ய வேண்டும். இந்து சமய அறநிலையத் துறையிடம் ஏராளமான ஆவணங்கள் இருக்கின்றன. அவற்றை முன்வைத்து, மூத்த வழக்கறிஞர்களை நியமித்து வழக்காட வேண்டும். சிதம்பரம் கோயில் மீட்டெடுக்கப்பட்டு மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

# பதினொன்றாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு தமிழுக்கு நேர்ந்த பேரவலம்!

முனைவர் கி குணத்தொகை

பதினொன்றாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, இந்தத் திங்கள் 7, 8, 9 ஆகிய மூன்று நாள்களில் தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் நடைபெற்றது. இதனைப் பத்துக் கோடியாக உள்ள தமிழர்களில் எத்தனைப் பேர் அறிவர்? உலகத் தமிழர் முதல் உள்ளூர்த் தமிழர்வரை ஓரிரு விழுக்காட்டினர் அளவுக்கு மட்டுமே தெரிந்த செய்தியாக அது அமைந்துவிட்டது. இது தமிழுக்கும் தமிழர்க்கும் நேர்ந்த பேரவலம். உலகத் தமிழர்க்குப் பெருவருத்தம் தந்து அவர்தம் உள்ளத்தைக் குமைவித்துள்ளது.

### உலகளாவிய தமிழ்மொழி

தமிழ்மொழி ஞால முதன் மொழி; மாந்த மொழி; மக்கள் மொழி; அது தேவபாடை இல்லை. தமிழ்மக்களின் உழைப்பின் ஊடாக வளர்ந்த மொழி. மொழிப்புலமையோர் கூடிச் செய்த மொழியன்று. அற்றைத் தமிழ்மக்களின் வாய்மொழிப் பாடல்களாகப் பிறப்பெடுத்த அதன் இலக்கியம் புலவோர்தம் செவ்வியல் படைப்புகளால் செழுமையுற்றது. பிறமொழிக் கலப்பின்றித் தனித்தியங்கக் கூடிய மொழி தமிழ். உலகின் பல மொழிகளிலும் தன் வேர் பரவி இருக்கின்ற மொழி தமிழ். சிந்து நாகரிகம் மட்டுமன்றி, எகிப்து, சுமேரியா போன்ற பல தொன்மை நாகரிகங்களிலும் தமிழ் நாகரிகத்தின் சுவடுகளைத் தொல்லியல் ஆய்வுகள் புலப்படுத்தி யுள்ளன. இதனைப் பாவலரேறு ஐயா தம் பாடலடிகளில், “சிந்து மணற்பரப்பில் சிற்றில் விளையாடி, முந்தை எகுபதியர், மூத்த சுமேரியத்தார் செந்திரு நாவில் சிரித்த” மொழி என்று வெகு அழகாக நினைவூட்டுகின்றார். அற்றைக்கு இவ்வுலக உருண்டையில் பல நாடுகளைப் பெற்றிருந்த தமிழினத்திற்கு, இற்றைக்குத் தனி இறையாண்மை பெற்ற ஒரு நாடு இல்லாது போனாலும் அவ்வினம் இல்லாத நாடு இத் தரை மீது உளதோ? இல்லையே. ஏறத்தாழப் பத்துக் கோடித் தமிழர் வாழும் இந் நாளிலே, இத்தகைய சிறப்புகளும் தமிழை உயிரினும் மேலாகப் போற்றும் தமிழ்மக்களும் கொண்ட மொழி தொடர்பான இம் மாநாடு பற்றிய செய்தி அம் மக்களுக்குச் சரியாக போய்ச் சேரும்படி உரிய செய்திப் பரப்பலின்றி, நடந்து முடிந்துள்ளது பேரவலப் பெருந்துயரம் எனில் மிகையன்று.

### மாநாட்டுக் குழப்பங்கள்

இம் மாநாடு நடைபெறுவது பற்றியும் இந்த மாநாட்டிற்கு ஆய்வுக் கட்டுரைகளை அனுப்புவதுபற்றியும் பல மாதங்கள் முன்பே, செய்தியாளர் கூட்டம் நடத்தித் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இந்தச் செய்தியை ஒன்றிரண்டு ஊடகங்கள் மட்டுமே மிகச் சுருங்கிய அளவில் வெளியிட்டன. ஆனாலும் ஏறத்தாழ ஆயிரம் அளவிற்கு ஆய்வுக் கட்டுரைச் சுருக்கங்களைத் தமிழ் ஆய்வாளர்கள் அனுப்பினர். இந்த மாநாடு சிங்கப்பூரில் 2023 சூன் மாதம் நடைபெறும் என்று தெரிவிக்கப் பட்டிருந்தது. ஏறத்தாழ முந்நூறு விரிவான ஆய்வுக் கட்டுரைகள் மாநாட்டு ஆய்வுக் குழுவிடம் வந்துசேர்ந்துள்ளன. இதனிடையே, மாநாடு சார்சாவில் நடைபெறும் என்று ஓர் அறிவிப்பு உலவியது. இது ஆய்வாளர், அறிஞர், ஆர்வலர் என்று அனைவரிடத்திலும் குழப்பத்தினை ஏற்படுத்தியது. அது போட்டிக் குழு ஒன்றின் செய்தி என்று தெரியவந்தது. எந்த மாநாடு நடைபெறும்? எந்த மாநாட்டிற்குச் செல்வது? என்று பலரும் குழம்பினர். மாநாட்டில் படிப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஆய்வுக் கட்டுரையை எழுதியோரின் வானூர்திக் கட்டணத்தை வழங்குவதாகப் போட்டிக் குழு அறிவித்தது. பிறகு அது, மாநாட்டினை சார்சா□வில் இருந்து, மலேசியாவில் சூலை 21 .. 23 நாள்களில் நடத்துவதாக அறிவித்துள்ளது. இணையத்தளத்தில் அறிவிப்புகளும் செய்து வருகின்றது. தமிழ்நாட்டு முதலமைச்சரையும் பிற அமைச்சர்களையும் நேரில் சந்தித்து அழைத்திருக்கின்றனர்.

முறைப்படியான உலகத் தமிழாராய்ச்சி மன்றம், “மாநாட்டில் கட்டுரை வழங்குவதற்கான வாய்ப்பினைக் கேட்டுக் கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன என்றும் இதுபற்றி, உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் நடுவக் குழு சிங்கப்பூர் அமைப்பாளர்களுடன் கலந்தாய்ந்தது என்றும் அதனையடுத்து மாநாட்டில் கட்டுரை படிப்பதற்கான அறிஞர் எண்ணிக்கையின் வரம்பை தளர்த்துவதென்றும், அதற்குப் பொருத்தமாக மாநாட்டைத் தமிழ்நாட்டில் நடத்துவதென்றும் முடிவு செய்துள்ளதாக அறிவித்தது. இந்த மாநாடு சூலைத் திங்கள் 7, 8, 9 ஆகிய நாள்களில் ஆசியவியல் நிறுவனத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

### ஊடகங்களின் இருட்டடிப்பு

ஞால முதன்மொழியாய்ச் சிறப்பும் செழுமையும் வாய்ந்த உலகளாவிய செம்மொழியின் பதினொன்றாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டினை, முறைப்படியான உலகத் தமிழாராய்ச்சி மன்றம், சென்னையில் நடத்துகின்றதைப் பற்றிய செய்தி ஊடகங்களில் பெரிதாக ஏதும் வெளிவரவில்லை. “55 ஆண்டுகளுக்குப் பின் சென்னை திரும்பும் உலகத் தமிழ் மாநாடு” என்று தலைப்பிட்டு ஓர் ஆங்கில நாளேடு உள் பக்கத்தில் மகிழ்வாக வெளியிட்டிருந்ததைக் காணமுடிந்தது. மற்ற ஒன்றிரண்டு ஏடுகளில் வரிச்செய்தி அளவிற்கே செய்தி வெளியாகியது. தமிழுக்குத் தொண்டு செய்வதாகத் தம்பட்டம் அடித்துக்கொள்ளும் நாளேடுகள், பெயரிலேயே தமிழ் என்பதைச் சேர்த்துவைத்திருக்கிற செய்தியேடுகள் என்று தமிழில் ஊடகம் நடத்திப் பெரும்வருவாய் பெறும் செய்தித்தாள்களும் காட்சி ஊடகங்களும் இந்தச் செய்தியில், காந்தியார் போற்றிய குரங்குப் பதுமைகளாகிச் செஞ்சோற்றுக் கடன் தீர்த்தன. இந்திய அரசு, தமிழ்நாட்டரசு ஆகியவற்றின் அரவணைப்பு இல்லை என்பதை அறிந்தோ, அவ் அரசுகளின் அதிகாரிகளின் அறிவுரைப்படியோ, ஊர் இரண்டுபட்டிருக்கிறது என்றோ ஊடகங்கள் இவ்வாறு இருட்டடிப்புச் செய்திருக்கலாம் என்றும் எந்த அரசின் நல்கையும் கிட்டாத சூழலில் இம் மன்றமும் தேவைப்பட்ட விளம்பரத்தைச் செய்யமுடியாமல் தடுமாறியுள்ளது போலும் என்றும் மாநாட்டிற்கு வந்த தமிழன்பர் பலர் தங்களுக்குள் பேசிக் கொண்டனர். ஊடகங்கள் மாநாடு நடப்பதற்கு முன்னாள்களிலோ நடந்துகொண்டிருந்த நாள்களிலோ அதுபற்றி ஒருவரியும் வந்துவிடாதபடி கண்களில் விளக்கெண்ணெய் விட்டுக்கொண்டு ஊடக அறத்தை (பத்திரிகை தருமம்) நன்கு கடைப்பிடித்தன. செய்தியேடுகள் ஒன்றிரண்டு மட்டும் மாநாடு நடந்துமுடிந்த செய்தியை வெளியிட்டன. “இனித் தமிழார்வலர் போகமுடியாது; வெளியிடலாம்” என்ற எண்ணம்போலும். அல்லது நிரப்பி(Filler)ச் செய்தியாக அமைந்திருக்கும்.

### மாநாடு நடந்த வகை

மாநாட்டினை நடத்தும் உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் ஆளுகையாரிடையே பிளவு, ஒருங்கிணைப்பின்மை, முதுமை, அரசுகளின் நல்கையும் துணையுமின்மை, ஊடகங்களின் இருட்டடிப்பு என்று பல்வேறு பின்னிழுப்புகளிடையே, நிதிப் பற்றாக்குறையும் போட்டி மாநாடு தொடர்பான செயற்பாடுகளும் சேர்ந்து இந்த மாநாட்டினைச் சிறப்பாக நடத்தமுடியாமல் போனது. சூலை 7, 8, 9 நாள்களில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட மாநாடு பற்றி, சூலை நான்காம் நாள்வரை எந்த அறிவிப்பும் வராததால், இந்த மாநாடு நடைபெறுமா? நடைபெறாதா என்ற ஐயம் மாநாட்டில் பங்கேற்கவிருந்த ஆய்வாளர், அறிஞர், பேராசிரியர், ஆர்வலரிடையே ஏற்பட்டது. எப்படியோ இறுதியாக, சூலை ஐந்தாம் நாள், மாநாட்டின் நிகழ்ச்சிநிரலும் ஒவ்வொரு நாளிலும் ஒவ்வோர் அமர்விலும் ஒவ்வோர் அரங்கிலும் ஆய்வுக் கட்டுரை வழங்கவிருப்போர் பட்டியலும் மன்றத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது. 55 பக்கங்களில் இந்த செய்தி இருந்தது. நிகழ்ச்சி நிரலிலும்கூட மாநாட்டைத் தொடங்கி வைப்பவர், சிறப்பு விருந்தினர் யாவர் என்று எந்தச் செய்தியும் இல்லை. மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சி நடந்தபோதுதான் தமிழ்நாடு அரசின் சிறுபான்மையோர் ஆணையத் தலைவர் திரு. பீட்டர் அல்போன்சு மாநாட்டினைத் தொடங்கிவைக்கிறார் என்று தெரியவந்தது. அவர் தமிழறிஞரும் அல்லர்; தமிழ்ப் பேராசிரியருமல்லர்; தமிழாராய்ச்சியாளரும் அல்லர்; ஏதோ ஒரு காரணத்தால் அவர் அங்கே அழைக்கப்பட்டிருந்தார் போலும். தமிழ்நாட்டில் முன்பு நடைபெற்ற மாநாடுகளில் குடியரசுத் தலைவர், தலைமை அமைச்சர், முதலமைச்சர், தமிழ்வளர்ச்சித்துறை அமைச்சர் என்று நீளும் பட்டியலின்படி பலரும் பங்கேற்கும் மாநாடாக இருந்தன. ஆனால், இந்த மாநாடு அத்தகையோர் எவருமின்றி, ஓர் ஆணையத்தின் தலைவர் அதுவும் நேரடி மொழித் தொடர்பு இல்லாத ஆணையத் தலைவர் மாநாட்டினைத் தொடங்கிவைத்தது பொருந்தாத நிலையாக இருந்தது.

(தொடரும்)

# பொது சிவில் சட்டம் பூணூல், பஞ்சகட்சம், குடுமி அகற்றுவதற்கான சட்டத்திலிருந்து தொடங்கட்டும்..

● வழக்கறிஞர் வெற்றி ●

1.பொது சிவில் சட்டமா? சீரான சிவில் சட்டமா? (Uniform civil code or common civil code) என்ற வாத பிரதிவாதங்களுக்கிடையே அனைவருக்கும் புரிகிற வகையில் பொது சிவில் சட்டம் என்பதாக நாம் நமது பார்வையில் அலசுவோம்.

2. இந்திய சட்ட ஆணையம் கடந்த 31.8.2018□இல் தனது 185 பக்க அறிக்கையில் பொது சிவில் சட்டம் "தற்போது தேவையானதுமல்ல விருப்பத்திற்குரியதுமல்ல" என கூறிவிட்டது. அதன் பின்பு கடந்த நவம்பர் 2019ல் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பொது சிவில் சட்ட வரைவு மசோதா தீவிர எதிர்ப்புக்குப்பின் பா.ஜ.க அரசு திரும்பப் பெற்றுக்கொண்டு தற்போது மீண்டும் பாராளுமன்றத்தில் மார்ச் 2020 ல் "கிரோபு லால் மீனா" என்பவரால் முன்வைக்கப்பட்டுள்ளது.

3. தற்போது 22ஆவது இந்திய அரசின் சட்ட ஆணையம், இந்தப் பொது சிவில் சட்டம் தொடர்பான கருத்துகளைப் பொதுமக்கள் முன்வைக்க கோரியுள்ளதை அறிவோம்.

4. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட குற்றவியல் சட்டம் அனைவருக்கும் சமமானதாகவும் மற்றும் பொதுவானதாகவும் உள்ளது. அதே நேரத்தில் உரிமையியல் சார்ந்த சிக்கல்களில் அந்தந்த இன மக்களின், மதங்களின் வாழ்வியல் நெறிமுறைகளையும், விதிகளையும் பழக்கவழக்கங்க ளையும் அடிப்படையாகக் கொண்டு அந்தந்த மதங்கள் தனிச்சட்டங்களைப் பின்பற்றலாம் என்றவாறு இருந்தது, அது தற்போது வரை நடைமுறையில் இருந்து வருகிறது. உரிமையியல் சட்டங்கள் என்பது திருமணம், வாரிசு, தத்தெடுப்பு, சொத்துரிமை, பராமரிப்பு என்பவையாக உள்ளன. தற்போது ஒன்றியத்தில் ஆளும் பாஜக நடுவணரசு பல்வேறு கலாச்சார, பண்பாடு, மொழிகள், மதங்களை, பின்பற்றும் மக்களின் பன்முகத்தன்மையை அழித்து பொதுமையாக்கப் போவதாகவும் அதற்காகப் பொதுவான உரிமையியல் சட்டம் கொண்டு வர உள்ளதாகவும் அறிவித்துள்ளது.

இதன் தொடக்கமாகவே ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே ரேசன் என்றவாறு முழக்கங்களை முன்வைத்து அனைத்து மக்களின் மீதும் ஒற்றைத் தன்மையை சர்வாதிகாரமாகத் திணித்து வருகிறது.

5. இந்தப் பொது சிவில் சட்டம் கொண்டு வருவதற்கு மிக முக்கிய காரணமாக இவர்கள் கூறுவது இந்தியாவில் வசிக்கும் அனைவருக்கும் ஒரே மாதிரியான சட்டங்கள் தேவை என்பதும் பொது சிவில் சட்டம் அனைவரையும் சமமாகப் பாவிக்கும், பெண்களை மதத்தில் உள்ள பாகுபாடுகளிலிருந்து முழுமையாகப் பாதுகாக்கும் என்பதேயாகும்.

6. சனாதன சக்திகள் சொல்வது போல இந்தச் சட்டம் வந்துதான் அனைத்து மதப் பெண்களையும் பாதுகாக்கும் என்பது ஏற்கத்தக்கதல்ல. ஏற்கனவே பெண்களின் பாதுகாப்பிற்குப் "பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை பாதுகாப்புச் சட்டம் 2005 உள்ளது". முழுக்க முழுக்க அனைத்து மத ரீதியான பெண்களையும் பாதுகாக்கும் சிறப்புச் சட்டமாக இந்தச் சட்டம் உள்ளது.

7. அடுத்ததாக, தற்போது முன் மொழியவுள்ள இந்தப் பொது சிவில் சட்டத்தின் மற்றொரு கூறு அனைத்து மக்களுக்கும் இந்தச் சட்டம் பொதுவானதாகக் கூறுகிறார்கள். ஆனால் உண்மையில் நிலைமை வேறு. எடுத்துக்காட்டிற்கு அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் எனச் சட்டம் போட்டாலும் பார்ப்பனர்கள் மட்டுமே பூஜை செய்யும் உரிமை பெற்றவர்களாக உள்ளனர். அதனை உயர் உச்ச நீதிமன்றங்களும் தொடர்ந்து உறுதி செய்து வருகிறது. மனுதர்ம வர்ணாசிரம கோட்பாடுகளையே நீதிமன்றங்களும் தொடர்ந்து உறுதி செய்து வருகிறது எனவே எந்தச் சட்டங்கள் கொண்டு வந்தாலும் அனைத்துச் சட்டங்களும் மனுதர்ம வர்ணாசிரம அமைப்பைக் கொண்டே இந்தியாவில் இயங்குகிறது.

8. இஸ்லாமிய சமூகத்தில் பின்பற்றப்படும் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்கள் செய்யும் முறையையும் விவாகரத்து தொடர்பான முத்தலாக் விதிகளையும் காரணம் காட்டியும் மற்ற சிறுபான்மை மக்களும் தங்களுடைய மக்களின் அடிப்படை உரிமைகளை நசுக்குவதாகவும், மனிதத் தன்மையற்று இருப்பதாகவும் கூறி, இந்த சனாதன சக்திகள் மனித சமூகத்தையே காப்பாற்ற வந்த தூதுவன் போல போர்வையை போர்த்திக்கொண்டு உள்ளீடாக மனுதர்ம இந்து சட்டங்களை மெல்ல மெல்ல திணிப்பதற்காக இந்தப் பொது சிவில் சட்டத்தை ஆயுதமாகப் பயன்படுத்துகிறது.

9. சிறுபான்மையின மக்களின் உணர்வுகள், பழக்கவழக்கங்கள், நடைமுறைகளைச் சீர்த்திருத்தங்கள் செய்வதோ அல்லது அதனை முற்றிலுமாக மாற்றுவதோ அந்தந்த மக்களின் உரிமையாகும். இஸ்லாமிய மதத்திலோ அல்லது மற்ற சிறுபான்மை மதமான கிருத்துவம், பௌத்தம், சீக்கியம், பார்சி, ஜையினம், ஆகிய மதங்களிலோ சட்டத்திற்கு முரணாகவோ அல்லது மனிதத்தன்மையற்ற பாகுபாடுகள் இருக்குமானால் அதில் அரிதாக நீதிமன்றங்கள் தலையிட்டு சரி செய்து வருகின்றன. எடுத்துக்காட்டு தொலைபேசியில் முத்தலாக் கூறுவது ஏற்புடையதல்ல என்ற நீதிமன்றத்தின் தீர்ப்பு.

10. மேலும் அரசியலமைப்புச் சட்டத்தின் 44வது பிரிவு ஏற்கனவே பொது சிவில் சட்டம் தொடர்பானவற்றை அடிப்படை உரிமைகள் அல்லாத பகுதி மிக்ஷில் "அரசின் நெறிமுறை உணர்த்தும் கோட்பாடுகளில்" வைக்கப்பட்டுள்ளது. இது கட்டாயம் பின்பற்றப்படவேண்டும் என்ற அளவில் இல்லாமல் தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதே ஆகும். எனவே பொது சிவில் சட்டம் என்பது சிறுபான்மை மக்களின் மீது திணிக்கப்படும் ஒரு வன்முறையேயாகும். எனவே இந்து மதத்திற்குள்ளான ஏற்றத்தாழ்வுகளும், தீண்டாமை வடிவங்களும், வழிபாட்டு உரிமைகளும் பூஜை செய்யும் உரிமையுமின்றி ஒரு மதத்திற்குள்ளே பெரிய அளவிலான ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றது. குறிப்பாக பண்பாடு, கலாச்சார ரீதியாகவும், இந்து மதத்தில் உள்ள பார்ப்பனர்கள் தங்களைத் தனியாக அடையாளப்படுத்திக்கொண்டு பஞ்சகட்சம் கட்டிக்கொண்டும், முன் பாதி முடியை மழித்துக்கொண்டு தலையின் மத்தியிலே குடுமி வைத்துக் கொண்டு இந்த இந்து சமூகத்தில் தனித்தப் பிறவிகளாகத் தங்களைக் காட்டி வாழ்ந்து வருகின்றனர். ஆகம விதிகளை முழுமையாக கற்றுக் கொண்டாலும், பார்ப்பனன் அல்லாதோர் கருவறையில் பூஜை செய்ய இயலாது என்ற நீண்ட நெடிய பாகுபாடுகளைக் கொண்ட இந்து சமூகத்தில் முதலில் மாற வேண்டியது இந்து சனாதன தர்மத்தை ஏற்றத்தாழ்வை தாங்கிபிடிக்கும் பார்ப்பனர்கள் தான். இந்த ஒட்டு மொத்த இந்து சமூகத்திலே விநோதமாக வாழ்ந்து வருகிற பார்ப்பனர்கள் தங்களையே பூணூல் பஞ்சகட்சம் முடி மழிப்பு தென்கலை வடகலை குறியீடுகள் ஆகியவற்றைத் துறப்பதிலிருந்தே "பொது சிவில் சட்டம்" தொடங்க வேண்டும். பொது சிவில் சட்டம் கொண்டு வர முதலில் மதங்களுக்குள் உள்ள மனிதர்களிடமே பொது உணர்வு சமத்துவம் உருவாக்கப்படுவது தேவைப்படுகிறது. அது இந்து மதத்தில் இருந்து தொடங்கப்பட வேண்டும்.

11.. உண்மையில் இன்றைய சமூக தேவை என்னவென்றால் ஒவ்வொரு மதத்திற்குள்ளேயும், அவர்களுக்குள் அனைவரையும் சமமாக எற்றத்தாழ்வுமின்றி மதிக்கக்கூடிய தனிச்சட்டங்களே இன்றைய தேவையாக உள்ளது.

12. சட்ட ரீதியாக அரசியலமைப்புச் சட்டத்தின் பகுதி மிக்ஷி ல் சரத்து 25 முதல் 30 வரைஅடிப்படை உரிமைகளில் மதரீதியான வழிபாடு, மத சுதந்திரம் சிறுபான்மையினருக்கான பாதுகாப்பு உரிமைகள் மற்றும் கல்வி உரிமைகள், வைக்கப்பட்டுள்ளது. தற்போது கொண்டு வரப்படவுள்ள பொது சிவில் சட்டம் மறைமுகமாக சிறுபான்மை மதங்களின், மக்களின் அடிப்படை உரிமைகளை ஒட்டுமொத்தமாக அழித்துவிடும்.

13. இதனால் சிறுபான்மை மக்களுக்கு தற்போது கிடைத்து வருகிற அனைத்து விதமான அடிப்படை உரிமைகளும் முற்றிலும் அழிக்கப்படும். குறிப்பாகப் பிரிவு 30-ல் உள்ள சிறுபான்மையினருக்கானக் கல்வி நிலையங்கள் நடத்தும் உரிமையும், மற்றும் இட ஒதுக்கீடு ஆகியவை இல்லாமல் போகும். இதனால் இந்துத்துவ வெறிபிடித்தப் பகுதிகளில் இஸ்லாமிய மாணவர்களை மற்ற கல்லூரிகளில் சேர்த்துக் கொள்வது திட்டமிட்டு நிறுத்தப்படும் அல்லது மிரட்டப்பட்டு வெளியேற்றப்படுவார்கள். இடஒதுக்கீடும் கேள்விக் குறியாகிவிடும். மேலும் சுதந்திரமான மற்ற சிறுபான்மை மதங்களின் வழிபாடு செய்யும் உரிமை, கல்வி உரிமை, மத வழிபாடு ஆகியவை முற்றிலும் கேள்விக்குறியாகிவிடும்.

14. இந்திய சமூகத்தில் மேற்படியாகப் பொது சிவில் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டால் சிறுபான்மை மதங்களுக்கிடையே ஒரு பதட்டமான சூழ்நிலையை உருவாக்கும். சிறுபான்மை கிருத்துவ சமூகத்தின் மீது அரசு சார்ந்த இந்துப் பயங்கரவாத குழுக்கள் மணிப்பூரில் தொடர் தாக்குதல் நடத்திப் பெருவாரியான மக்களை வெளியேற்றியது போல மற்ற பகுதிகளிலும் மதமோதல்கள் திட்டமிட்டு உருவாக்க வழி வகுக்கும். மக்கள் இரண்டாக பிரிக்கப்பட்டு பாஜக சனாதன அரசு நிரந்தரமாக இந்தியாவில் அரசாட்சி

செய்வதற்கு அடித்தளமிட்டுக் கொள்ளவே இந்தப் பொது சிவில் சட்டத்தைச் சர்வாதிகாரமாக தினிக்கிறது
.

15. ஆனால் உண்மையில் பொது சிவில் சட்டம் என்பது வேறு ஒன்றுமில்லை. மனுதர்ம வர்ணாசிரமக் கோட்பாடுகளைப் புதிய மூலாம் பூசி வேறு வடிவங்களில் பன்முகத்தன்மை கொண்ட மக்களிடம் சிறிது சிறிதாக திணித்து சிறுபான்மையினரின் அனைத்து அடையாளங்க ளையும் அழித்து இந்துத்துவக் கொடுநெறிகளை சமத்துவமற்ற ஒரு வாழ்வியல் முறையை சர்வாதிகாரமாகத் திணிப்பதே ஆகும்.

16. இந்து மதமில்லாத பிற சிறுபான்மை மதமான இஸ்லாமிய ,கிருத்துவ,சீக்கிய ஜெயின் சமூகத்தினரின் ஒட்டு மொத்த அடையாளங்களை அழித்து பண்பாடு கலாச்சாரங்களை ஒழித்து இந்து மத பண்பாட்டையே ஒட்டு மொத்த இந்திய மக்களின் பண்பாடாக மாற்றுவதற்கான முயற்சியே ஆகும்.

17. இந்த இந்து மதப் பண்பாடு என்பது வேறு ஒன்றும் இல்லை மனுதர்ம வர்ணாசிரம கோட்பாடாகும். மனுதர்ம வர்ணாசிரம கோட்பாடென்பது வேறில்லை, சாதி ஆதிக்கத்தை நிலைநிறுத்தி ஏற்றத்தாழ்வுகளை நிலைப்படுத்துவதே, உழைக்காமல் உண்டு கொழுக்கும் ஒரு பிரிவையும் அவர்களுக்கு அடிமை மற்றும் இழி வேலை செய்வதற்கான ஒரு பிரிவையும் உருவாக்குவதே நிலைப்படுத்தி வைப்பதே ஆகும்.

## வாய்வீரம் பேசுகிறாய்! துயரில் பின் வாங்குகிறாய்!



உறங்கிக் கிடக்கின்ற
உணர்விலாத் தமிழனே!
இறங்கிப் போரிடாமல்
எதுவும் கிடைக்காது!
அறங்கெட்டுப் போனதிங்கே அரசு - ஆட்சித்
திறங்கெட்டுப் போனதென்று
தெளிவாய்த் தெரிந்த பின்னும்..... (உறங்கிக்)

மறங்கொண்டு போரிட்டால்
விளையும் எதிர்ப்புகளை
மனங்கொண்டே ஏற்காமல்
அஞ்சி மடங்குவதா?
முறங் கொண்டு புலியெதிர்த்த வீரம் - இன்று
தரங்கெட்டுப் போவதுவோ?
தமிழகத்தை மீட்காமல்.... (உறங்கிக்)

வாய்வீரம் பேசுகிறாய்!
துயரில்பின் வாங்குகிறாய்!
தாய்நாட்டைப் பார்க்காமல்
தன்னலத்தைப் பார்க்கின்றாய்!
நாயும்தன் உரிமைக்குப் பாடுபடும் - இங்கே
மாயும் தமிழர்களைப் பார்!
மற்றென்ன உன் கடமை?... (உறங்கிக்)

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

# மக்கள் மனதைக் கவர்ந்த மாமன்னன்

• தமிழ்முகம்

இயக்குநர் மாரி செல்வராஜின் மூன்றாவது திரைப்படம்... அண்மைக்காலமாகச் சாதிய ஆணவப் போக்குகளைக் கண்டிக்கும் வகையில் பல திரைப்படங்கள் வெளிவருகின்றன. அவற்றில் அரசியலில் சமூக நீதிப் பேசுகிறது மாமன்னன். படத்தில் மாமன்னனாக வடிவேலும், அவர் மகன் அதிவீரனாக உதயநிதியும, திரை நாயகி லீலாவாக கீர்த்தி சுரேசும், வில்லன் இரத்தினவேலாக, மலையாள நடிகர் பகத் பாசில் ஆகியோர் சிறப்பாக நடித்துள்ளனர்...

சமூக நீதிப் பேசும் தேர்தல் அரசியல் கட்சிகளுக்குள்ளும் சாதி தீண்டாமை ஆழமாக வேர் விட்டுள்ளது என்பதே மாமன்னன் பேசும் அரசியல். மொத்தத்தில் மாமன்னன் பேசவந்த அரசியலும், பேசிய முறையும் கவனத்திற்குரியது.

ஊர்க் கோவில் குளத்தில் குளித்ததற்காகத் தனது நான்கு நண்பர்கள், தன்னுடைய கண் முன்னாலே கல்லால் அடித்துக் கொல்லப்பட்டதை அறிந்தும், தனது தந்தை, சொந்தக் கட்சி நலனுக்காக, ஊரின் ஆதிக்கச் சாதியினரின் பேச்சைக் கேட்டு, அந்தப் பிரச்சனைக்கு அமைதி காக்கிறார். இதை அறிந்த அதிவீரன் 15 ஆண்டுகளுக்கும் மேலாகத் தனது தந்தையுடன் பேசுவதைக் கூட நிறுத்தி விடுகிறார். சாதி பலத்துக்காகவே ஆளுங்கட்சியின் மாவட்டச் செயலாளராகப் பதவி பெற்றிருப்பவர் இரத்தினவேல். மாமன்னனும் அதிவீரனும், இரத்தினவேலைச் சந்திக்கும் சூழலில், அதிவீரனை மட்டும் உட்காரச் சொல்கிறார் இரத்தினவேல். அதிவீரன் தனது தந்தையை உட்காரச் சொல்கிறார், எங்கள் முன்னால் உனது தந்தை உட்கார மாட்டார் என இரத்தினவேல் கூறியதும், வலுக்கட்டாயமாகத் தனது தந்தையை உட்கார வைக்கிறார் அதிவீரன். அதனால் இருவருக்கும் கைகலப்பு மோதல் வெடிக்கிறது.

காலம்காலமாகக் கட்டிக் காத்து வந்த சாதியக் கோட்டை அதிவீரனால் தகர்க்கப்பட்டதை இரத்தினவேலின் மனம் ஏற்க மறுக்கிறது. முதலமைச்சர் வரைக்கும் சிக்கல் போகிறது. மாமன்னனின் தரப்பு ஞாயத்தை அறிந்த முதலமைச்சர் இரத்தின வேலை அழைத்துக் கண்டிப்பதுடன், மன்னிப்பும் கேட்கச் சொல்கிறார்..

கட்சி அதிகாரமா? சாதி அதிகாரமா? என்கிற நிலை வரும்போது, சாதி ஆணவம்தான் என முடிவெடுத்துக் கட்சியிலிருந்து விலகுகிறார் இரத்தினவேல்.. எதிர்க்கட்சியில் இணையும் அவருக்கு அதே சாதி பலத்திற்காக மாவட்டச் செயலாளர் பதவி கிடைக்கிறது. அடுத்து வரும் சட்டமன்றத் தேர்தலில் மாமன்னனைத் தோற்கடிப்பதே தனது முதன்மை வேலைத்திட்டமாக வைத்து சாதிவெறியர்களோடு சேர்ந்து பெரும் நெருக்கடி கொடுக்கிறார்.

ஊர் மக்களிடம் சாதிய உணர்வு மேலோங்கி இருந்தாலும் அவர்களின் பிள்ளைகளான இளம் தலைமுறையினர் சாதி ஒடுக்கு முறைக்கு எதிராக அதிவீரனுடன் கை கோர்க்கின்றனர். இந்த நிலையில் மாமன்னன் தேர்தலில் வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினராகிறார். சமூக நீதியைக் கொள்கையாகக் கொண்ட கட்சித் தலைமை, அவருக்கு அவைத்தலைவர் பதவி வழங்கி, சாதியவாதிகளுக்குச் சம்மட்டி அடி கொடுக்கிறது. இதுதான் திரைப்படத்தின் கதைச் சுருக்கம்.

இதுவரை வந்துள்ள திரைப்படங்களில் இல்லாத வகையில் திரைநாயகர்கள் ஒடுக்கப்பட்ட சாதி அடையாளமாகப் பன்றிகள் மீது அக்கறை காட்டி அன்பு செலுத்தும் அரசியலை இந்தப் படம்தான் பேசுகிறது. பன்றிகளும் ஆசையோடு வளர்க்கக் கூடிய செல்ல விலங்குகள்தாம் என்று சொல்லும் திரைக்கதை, உயிர்களிடத்தில் எதுவும் இழிவில்லை என்ற அரசியலைக் கொண்டு சேர்க்கிறது.

நாலு பேரோட கொலைவெறி, எப்படி நானூறு பேரோட மானப்பிரச்சினை ஆகும் என்று மாமன்னன் கேட்குமிடத்தில் சாதியவாதிகளின் காதுகள் மூடியே இருக்கிறது. கட்சிகள் நலனுக்காகச் சில ஞாயங்கள் பேசப்படாமலே ஊமையாகிப் போகும் களஅரசியலைத் தொட்டுச் செல்கிறது. நாம் கேள்வி கேட்கவே ஒரு பதவிக்கு, ஒரு இடத்திற்கு வரவேண்டியிருக்கிறது. ஏழைகள் கோபப்படவே தகுதி தேவைப்படுகிறது என்பது போன்ற உரையாடல்கள் திரைப்படம் முழுவதும் நிறைந்து கிடக்கிறது. சாதியை வைத்து அரசியலில் அதிகாரமுள்ள பதவிகளைப் பெறும் சாதியவாதிகள், சாதியா? அதிகாரமா? என்ற நிலை வரும்பொழுது சாதிய ஆணவத்தை விட்டு விடுவதில்லை. இங்கு அடையாளத்துக்காகவும், அரசியலுக்காகவும் மட்டுமே சமூகநீதி பேசப்படுகிறது. அதிகாரம் உள்ள பதவிகளுக்கு ஒடுக்கப்பட்டவர்கள் வந்தாலும் அவர்களுக்கான அங்கீகாரங்கள் கிடைத்து விடுவதில்லை. ஆதிக்கச் சாதியினர் அவர்களைச் சாதிய அடையாளத்துடன் பார்க்கும் கொடுமையே எல்லாக் கட்சிகளிலும் உள்ளது.

உன்னை உட்காரச் சொன்னது என்னுடைய அரசியல், உன் அப்பாவை நிற்க வைத்தது எனது அடையாளம் என இரத்தினவேல் பேசுவது ஆதிக்கச் சாதியாளர்களின் அடிமனதில் உறைந்து கிடக்கும் சாதி அழுக்கைப் படம் பிடித்து காட்டுகிறது. பெரியவர்கள் சாதியைத் தூக்கிச் சுமந்தாலும், அடுத்த தலைமுறைப் பிள்ளைகள் சாதி கடந்து நட்பு பாராட்டுவதான காட்சிகள், ஒரு நம்பிக்கையைக் காட்டுகிறது.

ஒதுக்கீட்டுக்குரிய சட்டமன்ற தொகுதி உறுப்பினரான மாமன்னனை, அவைத்தலைவராக அறிவிப்பது ஆட்சி அளவிலும் சமூகநீதி காக்கப்பட வேண்டும் என்ற செய்தியை உணர்த்தினாலும், இந்திய அரசமைப்புக்குள்ளாகவே புதைந்து கிடக்கிற சாதிய ஆணவத்தைப் பற்றி இப்படம் பேசவில்லை.. இன்றைய தேர்தல் அமைப்பிலேயே சாதி ஆணவங்களுக்குத் தீர்வு காணப்பட இயலும் என்பதான நம்பிக்கை உண்மையில்லை என்பதை இப்படம் காட்ட முன்வரவில்லை..

மற்றபடி பொறுப்பற்ற வக்கிர உரையாடலோ, பாலியல் வன் காட்சிகளோ இல்லாமல் அனைவரையும் குடும்பக அக்கறையோடு படம் பார்க்க வைத்த இயக்குநருக்குப் பாராட்டுகள்.

இறுதியில்,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்ற குறளுக்கு உயிரூட்டியது கூடுதல் சிறப்பு!

# தமிழை உயர்நீதிமன்ற மொழியாக்குவோம்!

## அரசியலமைப்பு வழங்கும் பிச்சையைக் கூடத் தட்டிப் பறிக்கின்றன இந்திய அரசும், உயர், உச்ச நீதிமன்றங்களும்.

● வழக்கறிஞர் பகத்சிங், மதுரை

“நான் எனது தாய்மொழியில் பேசுகிறேன் என்பதே ஏகாதிபத்திய எதிர்ப்புதான்” -ஷிகிவா தியாங்கோ

இந்திய அரசியலமைப்பை, கூட்டாட்சிப் பண்புகளும் ஒற்றையாட்சிப் பண்புகளும் கலந்த அரசியலமைப்பு என்று கூறுகிறார்கள். ஆனால் இது ஒற்றையாட்சியைப் பாதுகாத்து, மாநிலங்களின் உரிமைகளை - மொழி உரிமை உட்பட மறுக்கும் அரசிய லமைப்பு என்பதற்கு அரசியலமைப்பின் பகுதி XVII மொழி குறித்து சொல்லும் சரத்துகளே சாட்சி. ஆனாலும் இந்திய அரசியலமைப்பு மாநில மொழிகளுக்கு சில பிச்சைகளை அளிக்கிறது. ஆனால் நடுவண் அரசும், உயர், உச்சநீதிமன்றமும் அரசியலமைப்பு வழங்கும் அந்தப் பிச்சையைக் கூடத் தட்டிப் பறித்து வருகின்றன.

அரசியலமைப்பின் சரத்து 348 (2) மாநில உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு, ஆணை, உத்தரவு ஆகியவை தவிர மற்ற நடவடிக்கைகளை இந்தி மொழியில் நடத்திக் கொள்வதற்குக் குடியரசுத் தலைவரின் முன் அனுமதி பெற்று அம்மாநில ஆளுநர் அதிகாரம் அளிக்கலாம் என்று கூறுகிறது. அரசியலமைப்புச் சட்டம் 26.1.1950-இல் நடைமுறைக்கு வருவதற்கு முன்பே இராஜஸ்தான் உயர்நீதிமன்ற அவசரச் சட்டம், 1949-இல் இயற்றப்பட்டு, இராஜஸ்தான் உயர்நீதிமன்ற மொழியாக இருந்த ஆங்கிலம் நீக்கப்பட்டு, இந்தி கொண்டுவரப்பட்டது. பின் அரசியலமைப்புச் சட்டம் செயலுக்கு வந்த 18 நாட்களில் 14.01.1950-இல் அப்போதைய இராஜஸ்தான் மாநில அரசு சரத்து 348 (2)-இன்படி இந்தியை உயர்நீதிமன்ற மொழியாகக் குடியரசுத் தலைவரின் முன் அனுமதியைப் பெற்று அனுமதி வழங்கினர். அதன்பின் உ.பி., ம.பி., பீகார் மாநிலங்களில் முறையே 05.09.1969, 18.09.1971, 09.05.1972 தேதிகளில் அந்த மாநில மொழியான இந்தியை உயர்நீதிமன்ற மொழியாக்க குடியரசுத் தலைவர் ஒப்புதல் வழங்கினார்.

அரசியலமைப்புச் சட்டத்தின் சரத்து 343 இந்திய ஒன்றியத்தின் அலுவல் மொழி இந்தி என்று கூறுகிறது. சரத்து 343 (2)-ஆனது 15 ஆண்டுகளுக்கு ஆங்கிலம் அலுவல் மொழியாகத் தொடரும் என்றும், ஆனால் இந்த 15 ஆண்டுகளுக்குள் ஆங்கிலத்துடன் சேர்த்து இந்தியை கூடுதல் அலுவல் மொழியாக்கி சட்டம் இயற்ற பாராளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்க குடியரசுத் தலைவரை அனுமதிக்கிறது.

சரத்து 344 (1)-ஆனது 5 ஆண்டுகள் முடிவடைந்தவுடன் குடியரசுத் தலைவர் மொழி ஆணையம் (Language Commission) ஒன்றை அமைக்கும்படி கூறுகிறது. 344 (2) இந்த மொழி ஆணையம் இந்தி மொழியை உடனடியாகவும் வெகு விரைவாகவும் பயன்படுத்துதல், ஆங்கில மொழியின் பயன்பாட்டை வெகு விரைவாகக் கட்டுப்படுத்துதல், சரத்து 348-இல் சொல்லப்பட்டுள்ள (உச்ச, உயர் நீதிமன்றம், பாராளுமன்றச் சட்டம்) அனைத்திற்கும் அல்லது ஏதாவது ஒன்றிற்குப் பயன்படுத்தும் மொழி பற்றி குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை அளிக்க வேண்டும் என்று கூறுகிறது.

சரத்து 344 (3)-ஆனது மொழி ஆணையம் செயல்படும்போது, தொழில், பண்பாடு, அறிவியல் போன்றவை இந்தியாவில் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கின்றன என்பதைக் கருத்தில் கொண்டும், இந்தி மொழி பேசாத மாநில மக்கள் அரசின் பணியில் வேண்டிக் கொள்ளும் கோரிக்கைகளையும் உரிமைகளையும் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்று கூறுகிறது. சரத்து 344 (4)-ஆனது மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள் 30 பேர் கொண்ட பாராளுமன்றக் குழு பற்றியும், 344 (5) இந்த பாராளுமன்றக் குழு, மொழி ஆணையத்தின் பரிந்துரைகளை பரிசீலனை செய்து, அதன் கருத்துக்களை குடியரசுத் தலைவருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும், 344 (6) குடியரசுத் தலைவர் பாராளுமன்றக் குழுவின் அறிக்கையை முழுமையாக அல்லது ஒரு பகுதியை ஏற்றுக் கொண்டு ஆணை பிறப்பிக்கலாம் என்று கூறுகிறது. 07.06.1955இல் திரு.B.G. கெர் தலைமையில் மொழி ஆணையம் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் 08.02.1959-இல் அறிக்கை அளித்தது. அந்த அறிக்கை மாநிலங்களவை, மக்களவையிலும் முறையே 1959 ஏப்ரல் 2,3,4 தேதிகளிலும் 8,9 தேதிகளிலும் விவாதிக்கப்பட்டது. 04.04.1959 அன்று இது தொடர்பாக பிரதமர் நேருவும் தனது கருத்தை மக்களவையில் எடுத்துரைத்தார்.

மொழி ஆணையத்தின் அறிக்கை சரத்து 344 (6)-இன்படி பாராளுமன்றக் குழுவால் பரிசீலிக்கப்பட்டது. முடிவில் பாராளுமன்றக் குழு தனது பல பரிந்துரைகளை குடியரசுத் தலைவருக்கு வழங்கியது. அதில் ஒன்று மாநில உயர்நீதிமன்றத்தில் இந்தி அல்லது அந்த மாநில அலுவல் மொழியில் தீர்ப்பு, தீர்ப்பாணை, உத்தரவை குடியரசுத் தலைவரின் முன் ஒப்புதலுடன் வழங்கத் தேவையான சட்டத்தை இயற்றலாம் என்பதாகும். பாராளுமன்றக் குழுவின் பல பரிந்துரைகளை ஏற்று குடியரசுத் தலைவர் 27.04.1960-இல் ஆணை பிறப்பித்தார். இந்தி அல்லது அந்த மாநில அலுவல் மொழியை உயர்நீதிமன்ற மொழியாக்கச் சட்ட அமைச்சகம் தேவையான சட்டத்தை இயற்றும் என்று அந்த ஆணையில் குறிப்பிட்டார். குடியரசுத் தலைவரின் இந்த ஆணைப்படி 1963 இந்திய அலுவல் மொழிச் சட்டம் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டது. இதற்கு 10.05.1963-இல் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்து சட்டமாக்கினார். இச்சட்டத்தின் பிரிவு 7 மாநில உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு, தீர்ப்பாணை, உத்தரவு உட்பட அனைத்து நடவடிக்கைகளிலும் குடியரசுத் தலைவரின் முன் ஒப்புதலைப் பெற்று இந்தியை அல்லது அந்த மாநில அலுவல் மொழியை ஆங்கிலத்துடன் சேர்த்து கூடுதல் மொழியாக அமுல்படுத்தலாம் என்று கூறுகிறது. மொழி ஆணையத்தின் அறிக்கை பாராளுமன்றக் குழுவின் பரிந்துரை, குடியரசுத் தலைவரின் ஆணை, அதன் அடிப் படையில் உயர்நீதிமன்றத்தின் மொழி பற்றிக் கூறும் 1963 ஆட்சி மொழிச் சட்டத்தின் பிரிவு 7-ஆனது 07.03.1970-இல் அரசிதழில் வெளியிடப்பட்டு செயலுக்கு வந்தது.

1949-இலிருந்து இராஜஸ்தான், உ.பி., ம.பி., பீகார் மாநிலங்களில் இந்தி உயர்நீதிமன்ற மொழியாக ஆக்கப்பட்ட நிலையில், வங்காள மொழியை கல்கத்தா உயர்நீதிமன்ற மொழியாக்க வேண்டும் என்ற மேற்கு வங்க அரசின் கோரிக்கையை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பவில்லை. மாறாக, நடுவண் அரசு உச்சநீதிமன்றத்தின் ஒப்புதலுக்கு அனுப்பியது. 07-05-1997-இல் உச்சநீதிமன்ற அனைத்து நீதிபதிகள் கூட்டம் வங்க மொழியை உயர்நீதிமன்ற மொழியாக்க மறுத்தது.

2001-இல் வழக்குரைஞர் திரு.முத்துக்கிருஷ்ணன் தமிழை உயர்நீதிமன்ற மொழியாக்க அனுமதி அளித்து கவர்னர் அரசிதழில் வெளியிட, அவருக்கு உத்தரவிட வேண்டி W.P. No. 16939/2001 மனு தாக்கல் செய்தார். அந்த மனுவை அப்போதைய தலைமை நீதிபதி சுபாசன் ரெட்டி, நீதிபதி ரி.றி. சிவசுப்பிரமணியம் கொண்ட அமர்வு “அரசியலமைப்புச் சட்டம் சரத்து 348 (2) -இன்படி அதிகாரம் அளிக்கப்பட்டவர்கள்தான். அந்த அதிகாரத்தைப் பயன்படுத்த முடியும், உயர்நீதிமன்றம் சட்டம் இயற்ற முடியாது” என்று கூறி 18.09.2001 -இல் தள்ளுபடி செய்தது. பின் 2002 -இல் அப்போதைய முதல்வர் செல்வி ஜெயலலிதா தமிழை ஆங்கிலத்துடன் சேர்த்து கூடுதல் மொழியாகப் பயன்படுத்த சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியிடம் கருத்தைக் கேட்டு கடிதம் அனுப்பினர். 2001-இல் தங்களுக்குச் சட்டம் இயற்றும் அதிகாரம் இல்லை என மறுத்து ரிட் மனுவைத் தள்ளுபடி செய்த தலைமை நீதிபதி சுபாசன் ரெட்டி. 2003-இல் தமிழக அரசின் கடிதத்திற்கு, தமிழை உயர்நீதிமன்ற மொழியாக்க உடன்பாடு இல்லை எனக் கடிதம் அனுப்பினார்.

அதன்பின் 2006-இல் ஆட்சிக்கு வந்த திரு.கருணாநிதி அவர்கள் மீண்டும் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு கடிதம் எழுதினார். அப்போதைய தலைமை நீதிபதி திரு. கி.றி.சா அனைத்து நீதிபதிகள் கொண்ட கூட்டத்தில் தமிழை உயர்நீதி மன்ற மொழியாக்க ஒப்புதல் அளித்துத் தீர்மானம் இயற்றப்பட்டது. அதன்பின் 06.12.2006-இல் தமிழகச் சட்டமன்றத்தில் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் வேண்டி ஒருமனதாகத் தீர்மானம் இயற்றப்பட்டது. 07.12.2006 அன்று அத்தீர்மானம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற நடுவண் அரசிற்கு அனுப்பப்பட்டது. ஆனால் நடுவண் அரசு, வங்காள மொழிக்குச் செய்ததைப் போலவே குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பாமல் ஆட்சி மொழிச் சட்டம் பிரிவு 7-க்கு மாறாக உச்சநீதிமன்றத்திற்கு அனுப்பியது. உச்சநீதிமன்றமும் 07.05.1997, 15.12.1999, 11.10.2012, 16.12.2015 ஆகிய தேதிகளில் தொடர்ந்து தமிழ், வங்காளம், குஜராத்தி, கன்னடம் ஆகிய மொழிகளை உயர்நீதிமன்ற மொழியாக்க மறுப்புத் தெரிவித்து வருகிறது.

இந்நிலையில் கடந்த 27.04.2015, 19.04.2016-இலும் கூடிய Dr. சுதர்சன் நாச்சியப்பன் தலைமையிலான சட்டம் & நீதிக்கான பாராளுமன்றக் குழு மாநில மொழிகளை உயர்நீதிமன்ற மொழியாக்க மாநிலங்கள் கோரினால் உடனடியாக கோரிக்கை ஏற்கப் பட வேண்டும் என்றும், இந்நடவடிக்கைகளில் உச்சநீதிமன்றத்திடம் கலந்தாலோசிக்க அவசியமில்லை என தீர்மானித்து முறையே தனது 75, 76 அறிக்கையை அரசுக்கு அளித்துள்ளது. அதன்பின்பும் நடுவண் அரசு உச்சநீதிமன்றத்திடம் ஆலோசனைக்காக கோப்புகளை அனுப்பி இந்தி அல்லாத மாநிலங்களை ஏமாற்றி வருகிறது.

2009-இல் ப.சிதம்பரம் தலைமையிலான பாராளுமன்றக் குழுவின் அறிக்கையை அவசர அவசரமாக செயல்படுத்தி இந்தியை மக்கள் விருப்பத்திற்கு மாறாக திணித்து வருகிறது நடுவண் அரசு. ஆனால், 1959-இல் பாராளுமன்றக் குழு அளித்த அறிக்கையை குடியரசுத் தலைவர் ஏற்று அதன்படி 1963-இல் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றியது. அந்தச் சட்டத்தின் பிரிவு 7-ஐ இந்தி மாநிலங்களுக்கு மட்டும் உடனே செயல்படுத்திய நடுவண் அரசு, மற்ற இந்தி அல்லாத மாநிலங்களுக்குச் செயல்படுத்த மறுத்து மாநில மொழிகளுக்கு அரசியலமைப்புச் சட்டம் அளித்துள்ள சில பிச்சைகளையும் தட்டி பறிப்பது அநீதியாகும்.

வெளியீட்டுக் குழு : பொழிலன், பேரா. த. செயராமன், முத்தமிழ், கண. குறிஞ்சி, நிலவழகன், பாவெல்
தமிழ்நாடு (மாத இதழ்) 4/197 பல்லவன் நகர், 3 ஆவது தெரு, மேடவாக்கம், சென்னை 600100 கைப்பேசி 97108 75283, 91713 78874
(கீற்று இணையதளத்திலும் பார்க்கலாம்) மின்னஞ்சல் : thamizhnadu2051@gmail.com
அச்சிட்டோர் : மூகாம்பிகை அச்சகம், 24, வாணிபர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600005